திராவிடன்

ஆசிரியர் : என். வி. நடராசன்

மாலை : 8 11-3-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 31

சென்னையில் சிறப்புக் கூட்டம்

13—3—55 ஞாயிறு காலை 9-மணி

கோகலே மண்டபம்

●

என். வி. நடராசன்
—'சிதம்பர ரகசியம்'

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
—'கடவுள் எங்கே!'

டி. கே. சீனுவாசன்
—'இலட்சியப் பாதையில் நாம்'
என்பதைக் குறித்துப் பேசுவர்

●

நன்கொடை அணா 8, 4.

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

வருகிறது வருகிறது! உங்கள் ஊரில்! எதிர்பாருங்கள்!

ஆவடி சர்க்கஸ்!

நேரு சர்க்கார், ஐந்தாண்டு திட்டங்கள் என்ற பேரால் வடநாட்டிலேயே பெரும் பொருளைச் செலவழித்து, தொழிற்சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள் ஆகியவைகளை அமைத்தும், தென்னாட்டில் குறிப்பிடத்தக்க ஆக்கவேலைகளில் ஒன்றும் கவலை செலுத்தாமலிருந்தும் வருவதைக் கண்டு, தென்னாட்டுக் காங்கிரசில் பொறுப்புள்ளவர்களே மனம் விட்டுப் பேசும் நிலை வளர்ந்து வருகிறது!

இந்த ஓரவஞ்சனையை தி. மு. கழகம் சுட்டிக் காட்டியபோது, உதாசீனப்படுத்தி வீண் வியாக்கியானம் செய்துவந்த தென்னாட்டுக் காங்கிரஸ் தோழர்களில் அரசியல் யூகம் படைத்த ஒரு சிலராவது இன்று உண்மையை உணருவது குறித்து நாம் பெருமைப் படுகிறோம்.

ஆனால் தென்னாட்டுக் காங்கிரசாரிடையே ஏற்பட்டுள்ள இந்த எழுச்சியை அடக்குவதற்கும் தங்களின் ஆதிக்கவெறியை மறைப்பதற்கும் ஆவடி மாநாட்டிலே சிருஷ்டிக்கப்பட்ட "மாதிரி சோஷலிஸம்" என்ற தீர்மானத்தையும், மற்ற முடிவுகளைக் குறித்தும் நாடெங்கும் பிரச்சாரம் நடத்துமாறு காங்கிரஸ் மேலிடம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது!

நேரு சர்க்காரின் 'மாதிரி சோஷலிஸம்' எவ்வாறு யிருக்குமென்பதற்கு, 1955-56-ம் ஆண்டு வரவு—செலவு விவரத்தைப் பார்த்தாலே தெரிய வருகிறது! அதுமட்டுமல்லாமல், கவர்னர்களுக்கும், ராஜப் பிரமுகர்களுக்கும் சம்பளச் செலவு என்ற பேரால் அந்தந்த ராஜ்ய வருமானத்திலிருந்து லட்சக் கணக்கான ரூபாய்களை செலவிடப்படும் முறைகளே "மாதிரி சோஷலிஸ" மாடலை எடுத்துக் காட்டுகிறதே! இது போதாதென்று நாடெங்கும் பிரச்சாரம் வேறு செய்ய வேண்டுமாம்!

வெள்ளையர் ஆட்சியிலே யிருந்த சம்பளங்களும் கிம்பளங்களும், காங்கிரஸ் ஆட்சியிலே குறைந்தபாடில்லை. அன்று இதனை சம்பளக் கொள்ளை என்று கண்டித்து கர்ஜனை புரிந்தவர்கள் இன்று அதே பாதையில் வெள்ளையர்களைவிட துரிதநடை போடுகின்றனர்!

இன்னும் சொல்லப்போனால் இந்தியத் துணைகண்டத்திலுள்ள மாநிலங்களின் ஆட்சி போலீஸ் படையின் பலத்தை நம்பி நடைபெறுகிறதோ மத்திய சர்க்காரும் இராணுவ பல அடிப்படையில் ராஜ்ய பரிபாலனம் செய்கின்றனரோ என்று சந்தேகிக்கக் கூடிய வகையில் மக்கள் செலுத்தும் வரிப் பணத்தில் பெருந் தொகையை வாரிவீசப் பட்டிருக்கிறது! போதாக்குறைக்கு ஏழை—நடுத்தர மக்களைப் பாதிக்கும் வகையில் வரி விதிப்புகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன!

இந்த லட்சணத்தில்தான் ஆவடி மாநாட்டின் தீர்மானங்களை நாடெங்கணும் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் கட்டளை பிறப்பித்திருக்கிறது!

எனவே அதற்கேற்ப உங்கள் ஊரில் விரைவில் "ஆவடி சர்க்கஸ்" நடத்தப்படலாம்—எதிர்பாருங்கள்!

இந்த சர்க்கஸ் காட்சி அடுத்த பொதுத் தேர்தல்வரையும் நீடிக்கப்படலாம்! சில முக்கிய சந்தர்ப்பங்களில் "நவாப் ராசமாணிக்கமே அனுமார் வேடத்தில் தோன்றுவதைப் போல நேரு பண்டிதரே இந்த சர்க்கஸ் காட்சிகளில்—சில இடங்களில் நேரிலே தோன்றக்கூடும்."

ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பேரால் தென்னாட்டுக்குக் கிடைத்திருக்கும் மகத்தான வாய்ப்பு "ஆவடி சர்க்கஸ்" காட்சிதான்!

—நக்கீரன்

சரோசா—முருகேசன்

○

17—3—55 வியாழன் காலை 9-30 மணிக்கு திண்டிவனம் கலெக்டர் ஆபீஸ் ரோடு இராசா குளக்கரையிலுள்ள தோழர் மு. கண்ணன் அவர்களின் இல்லத்தில் தோழர் மு. முருகேசனுக்கும், தோழியர் அர. சரோசா அவர்களுக்கும் தோழர் எம். கே. கண்ணன் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு வாழ்த்துரை வழங்குவார்.

"மாஸ்கோ மருத்துவம்!"

ஆந்திரத் தேர்தலில் தங்கள் கட்சி படுதோல்வி யடைந்த காரணத்தைக் குறித்து கம்யூனிஸ்டு தலைவர்கள் ஆராய்ச்சி செய்கின்றனராம்!

ஆந்திரத் தேர்தல்

ஆந்திரத் தேர்தல் முடிவுக்கு வந்துவிட்டன. அதன் விளைவுகள் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமல்லாது இந்த நாட்டு மார்க்ஸீயவாதிகள் அனைவருக்குமே நல்லதொரு படிப்பினை ஆகும். முதலாளித்துவ முகாமாம் காங்கிரஸ்—பிர்லா, பஜாஜ், டாடா, டால்மியாக்களின் கூடாரமாம் காங்கிரஸ்—அங்கே வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறது! வாகைசூடி பதவிபீடம் ஏற இருக்கிறது. இதைக் கண்டு நாடெங்கணும் உள்ள நல்ல மனம் படைத்தோர் வேதனை யடைவர். ஆனால் ஆந்திரத் தேர்தலின் முடிவுகள் வேதனை தருவதும் அல்ல, வியப்பை அளிப்பதுமல்ல! எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் தான்! இப்படிக் கூறுகிறேன் எனக் கோபியாதீர்.

பாலையில் தூவப்பட்ட விதைகள், பச்சை மண்பாண்டத்தில் பெய்த நீர், கள்ளிக் காட்டில் படரவிடப்படும் முல்லை இவைகள் என்ன ஆகும்? பயன் தரும் என எதிர்பார்க்கலாமா? அப்படி எதிர்நோக்குவது அறிவுடைமையாகுமா? பாலை பண்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் கரையாமல் இருக்கும். கள்ளிக்காடு செப்பனிடப்பட வேண்டும். அப்போதுதான் முல்லை படரும் பூக்கும், மலரும், பின்னர் மணக்கும்.

இவைகளைப்போல பண்படா மக்களின் இதயங்களிலே தூவப்பட்ட பொதுவுடமை விதைகள் முளைக்கவா செய்யும்? முளையிலேயே கருகி அல்லவா போகும். இந்த நாட்டு மக்கள் எப்படிப்பட்ட மக்கள்? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆண்டான் அடிமை தத்துவத்தில் ஆழ்ந்து கிடப்பவர்கள். மதமெனும் குட்டையில் ஊறிக்கிடப்பவர்கள்! கால்வயிற்று கஞ்சிக்கு வழியற்று போனாலும் காத்தானிலிருந்து காட்டேரி முனியன் வரை ஆயிரமாயிரம் கடவுளருக்கு காணிக்கை செலுத்தத் தவறாத பரம்பரையினர். வேகாத வெய்யிலிலே, கொட்டும் மழையிலே உதிரத்தை உரையச் செய்யும் பனியிலே காட்டிலும் மேட்டிலும் உழைத்து அலுத்து உடல் கறுத்தாலும் உள்ளங் கருக்காத உத்தமர்கள். சுருங்கங் கூறின் ஏதுமறியாத ஏமாளிகள். அடுக்கடுக்காக இன்னல் வந்துற்ற போதெல்லாம் தங்கள் தலைவிதியை நொந்து கொள்வதைத் தவிர வேறொன்றும் அறியாத அப்பாவிகள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பது தங்களுக்கு ஆண்டவனால் விதிக்கப்பட்ட கட்டளை என்றும், உழைக்காமல் அலுக்காமல் வளையாமல் குனியாமல் உல்லாச பவனி வருவது மேட்டுக்குடியினருக்கு அதே ஆண்டவன் தந்த வரப்பிரசாதம் என்றும் எண்ணிஏமாறும் ஏதுமறியாதோர்.

இவர்கள் எண்ணத்தை உறுதிப் படுத்த மீறி விழிப்புண்டால் தட்டி அடக்க பழமை வெறியர்கள் பவனிவந்து ஆண்டவன் கட்டளையை மீறாதே, மீறினால் அதல சுதல தராதல பாதாள...என ஏழுவகை நரகங்கள் காத்திருக்கின்றன உன்னை விழுங்க என்று பயமுறுத்தி அடக்குகின்ற பரிதாபக் காட்சிகள் நடைபெறுவது இந்த புண்ய பூமியில்தான். இன்னும் எங்கே அந்த பாட்டாளிகள் இவற்றையும்மீறி ஒன்று சேர்ந்து போர்க்குரல் எழுப்பி விடுகின்றார்களோ என்ற அச்சத்தால் அவர்கள் என்றென்றும் ஒன்று சேராவண்ணம் இந்நாட்டு உழைப்பாளி பெருமக்கள் சமுதாயத்தை பல்நூறு ஜாதிகளாகப் பிரித்து அவற்றில் மேலும் பல உட்பிரிவுகளைத் திணித்து பிரித்தாளும் கொள்கையால் என்றென்றும் அடிமைகளாக்கி ஆண்டு வருகின்றது. இவ்வாறு முதலாளித்துவம், மதத்தின் உதவியால் வெற்றி வாகை சூடுகின்றது. முதலாளித்துவம் என்னும் நச்சுக்கொடி படர ஊற்றப்படும் நீர் மதத்துவம் ஆகும். அவ்வளவு நெருங்கிய இணைபிரியாத பந்த பாசங்களை உடையவை இந்த இரண்டும்.

இந்த பேருண்மை உணர்ந்ததால்தான் முதலாளித்துவ முகாமாம் காங்கிரஸ் மோகனதாஸ் கரம்சந்த் காந்தியை மகாத்மா ஆக்கிற்று. பாமரரிடம் இருந்து அவரைப் பிரித்து எட்டாத உயரத்தில் வைத்து பஜனை செய்தது. அவரும் சென்ற இடமெல்லாம் ராம்துன் நடத்தினார். அரசியலைப்பற்றி அவர் பேசியதைவிட ஆத்மார்த்தத்தைக் குறித்து அவர் அதிகமாகப் பேசினார். அதன் பின்னரே இந்த நாட்டில் காங்கிரஸ் வேரூன்றியது. மக்கள் காந்தியாரை அரசியல் தலைவராக எண்ணுவதைவிட அவதார புருஷனாகக்கொண்டு வழிபடுவதில் பெருமையடைந்தனர். ஆகவே காங்கிரசும் வளர்ந்தது. முதலாளிகளும் வளர்ந்தனர், டால்மியாக்களும், பிர்லாக்களும் பெருகினர். மதமெனும் மாயை கண்களை மறைத்திருந்ததால் மக்கள் இந்த பேருண்மையை உணரவில்லை.

நாடு கடத்தப்படும் அளவிற்கு புரட்சி சங்கநாதம் செய்து உரிமைக்குரல் எழுப்பிய கட்சியினர்! என்னதான் உயர்ந்த பொருளாதாரக் கொள்கைகளாக இருப்பினும் மதமாயை கண்களை மறைத்திருக்கும் வரை இந்த நாட்டு மக்கள் அவற்றை ஏறெடுத்தும் பாரார்.

கம்யூனிஸ தத்துவத்தை கார்ல் மார்க்ஸ் தங்களுக்குத்தான் "பேடண்ட்" உரிமை அளித்துக் கொடுத்தார் என்றெண்ணிக் கொண்டு இந்நாட்டில் உலவும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி கடந்த முப்பதாண்டு காலமாக இந்நாட்டில் இயங்கி வருகின்றது. எனினும் அன்றிருந்தபடியே இன்றும் மாறுபாடற்று ஒரு பழம்பெரும் அரசியல் கட்சி பெற்றிருக்க வேண்டிய இடத்தைப் பெற வழியில்லாது பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இந்திய மண்ணில் கம்யூனிஸ்ட் கட்சி துவங்கப்பட்ட பின்பே, சீனத்தில் பொதுவுடமை விதை எம். என். ராய் போன்ற இந்தியர்களாலேயே தூவப்பட்டது. இன்றைய செஞ்சீனத்தின் அதிபராம் மா-சே-துங், பம்பாய் நகரத்திலேதான் பொதுவுடமை பயிற்சி பெற்றார். இன்று அந்த சீனம் சிவப்பேறி விட்டது. பொதுவுடமைப் பூங்கா அங்கே தோன்றி ஆண்டுகள் ஐந்து பறந்தோடி விட்டன. சீனத்துப் பெருமக்கள் பீடுநடையுடன் பொதுவுடமைப் பாதையில் பாரோர் அதிசயிக்க, பண்டித நேரு பாராட்ட, ஆதிபத்திய அமெரிக்கா அஞ்ச, முன்னேறிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டு பொதுவுடமை

தரும் படிப்பினை?

திலகரால் வளர்க்க முடியாத காங்கிரஸ், வெஞ்சிறையிலே செக்கிழுக்க நேர்ந்த போதிலும் சித்தம் கலங்காத சிதம்பரச் செம்மலால் வளர்க்க முடியாத காங்கிரஸ், காந்தியார் மகாத்மா ஆக்கப்பட்டதும் வளர்ந்தது ஏன்? இங்குதான் எண்ணிப் பார்க்க வேண்டும். காந்தியார் காலத்து காங்கிரசை முதலாளித்துவம் தனது கைப்பாவையாகக் கொண்டு மக்களைச் சுரண்ட திட்டமிட்டது, மற்றபடி திட்டவட்டமான கொள்கைகளை காட்டி மக்களிடையே கவர்ச்சி ஊட்டி காங்கிரஸ் வளர்க்கப்படவில்லை. ராமராஜ்ய பஜனை பாடியே காங்கிரஸ் வளர்ந்தது. அண்மையில்தான் ஆவடியில் ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்குப்பின், "மாதிரி சோஷலிஸ சமுதாயம்" என்ற இலட்சியத்தை வெளியிட்டது. இதுவும் கண்துடைப்புக்காக, நாட்டு மக்களை மயக்கசெய்யப்பட்ட ஏமாற்று செப்படி வித்தையே.

இங்ஙனம் மதத்தை தனது கேடயமாகக் கொண்டு காங்கிரஸ் வளர்ந்தது. வளரவும் செய்கின்றது. கேரளத் தேர்தலின் போது, இந்தியப் பாராளுமன்ற பொதுவுடமை கட்சித் தலைவரான ஏ. கே. கோபாலன் பின்வருமாறு குற்றம் சாட்டினார். "கேரளத்துக் காங்கிரசார் கத்தோலிக்க பாதிரிகளின் துணைகொண்டு பாமர மக்களை பயமுறுத்தி வோட்டுப் பெறுகின்றனர். இதனை அரசாங்கம் உடனடியாக தலையிட்டு தடுத்தாக வேண்டும் என்றும் குறிப்பிட்டார், இந்த பேச்சு உணர்த்தும் பாடம் என்ன? இன்றுகூட தமிழகத்தில் தேசியத் திருமேனிகளுக்கு ஆதரவு தேடும் பணியில் பகிரங்கமாக குன்றக்குடிகளும், இன்னோரன்ன ஆண்டிப் பண்டாரங்களும் சல்லடம் கட்டிக் கொண்டு கிளம்பி யிருக்கும் காட்சிகள் உணர்த்தும் பாடம் என்ன? எதிர்க்கப்பட வேண்டியவர்கள் ஒரு முகாமில் மட்டுமல்ல, இரு முகாம்களில் மறைந்திருக்கின்றார்கள். அதுவும் ஒன்றுக்கொன்று உதவி செய்யும் இரு முகாம்கள். இதையேதான் திராவிடர் இயக்கம் வலியுறுத்தி கூறி வருகின்றது.

அஸ்திவாரம் இல்லாமல் எழுப்பப்படும் மாளிகை சிறு அதிர்ச்சிக்கு ஆளானாலும் தகர்ந்துவிடும். இந்த உண்மையை உணர மறுக்கிறார்கள் இந்த நாட்டு பொதுவுடமைவாதிகள் ஒரு மாநிலத்தில்கூட வெற்றிபெற வழியற்று திண்டாடித் திணறி நாளுக்கு நாள் தேய்ப்பிறையாகி வரும் பரிதாப காட்சியையே காண்கின்றோம்.

ஏன் இந்த அவலநிலை? இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள் பெற்ற வாய்ப்புகள், ஆற்றிய தொண்டு, புரிந்ததியாகம், இவைகள் என்ன இலேசானவைகளா? குறிப்பாகக் கூறின் இந்தநாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்த வாய்ப்பை போன்று வேறு எந்த அரசியல் கட்சியினருக்கும் கிடைக்கவே இல்லை. 1942 முதல் 1952 உள்ளிட்ட பத்தாண்டுகள் இந்த கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்த பொன்னான நேரம். அதிலும் முதல் நான்காண்டுகள் அதாவது 42 முதல் 46 வரை இந்தியத் துணைகண்டத்தில் கம்யூனிஸ்டுகளைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் முறையாக இயங்கவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சோஷலிஸ்டுகள் உட்பட பூட்டப்பட்ட கதவுகளுக்கு உள்ளே இருந்தனர். அந்த நேரத்தில் இந்த பொதுவுடமை வீரர்கள் போலீஸ் லாரிகளில் ஏறிச் சென்று யுத்தப் பிரச்சாரம் செய்வதிலும், சோஷலிஸ்டுகளையும், போஸ் கட்சியினரான பார்வர்டு பிளாக் கட்சியை சேர்ந்தவர்களை போலீஸாரிடம் பிடித்துக் கொடுப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

பின்னர் 47 லிருந்து 52 வரை இந்த நாடு நாடகவே காட்சியளிக்கவில்லை. பிணக்காடாக மாறியிருந்தது. யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட பணவீக்கத்தால் நாட்டின் பொருளாதார நிலை மிக சீர்கேடுற்றிருந்தது. காங்கிரஸ் கனவான்களோ பதவி வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடியது. பஞ்சமும் பரிதவிப்பும் நாடெங்கணும் பரவியபடியே இருந்தது. வடநாடு இந்து முஸ்லிம் கலவரங்களால் கொலைக்களமாக காட்சியளித்தது. ஆதரவற்றோர் அனாதையானோர் ஆஸ்திகளை இழந்தோர் பட்டியல் பெருகிக் கொண்டிருந்த நேரத்தில் நேரு சர்க்கார் வீணான வீம்பு பேசிக்கொண்டு காஷ்மீர் களத்தில் கோடானுகோடி ரூபாய்களை விரயம் செய்து கொண்டிருந்தது. தென்னகத்திலோ நிலைமை அதைவிட மோசம். மந்திரி சபைகள் மாறிக்கொண்டே யிருந்தன. காங்கிரஸார் பதவி மணம் நுகர்வதில் ஈடு

கம்யூனிஸ்டுகள் திருந்துவார்களா?

பட்டிருந்தனர். நாட்டிலோ பிணங்கள் சாய்ந்தவண்ணம் இருந்தன. கைத்தறி நெசவாளர் கையிலே திருவோடு ஏந்தி நிலம்பியவண்ணம் இருந்தனர். உழவர்கள் ஊர்விட்டு ஊர் பெயர்ந்து கொண்டிருந்தனர், பிள்ளையோ பிள்ளை எனக் கூவிவிற்கும் அளவிற்கு பஞ்சக்கொடுமை பரவி யிருந்தது. பஞ்சம் பஞ்சம் எனப் பதறிய மக்களுக்கு தோட்டாக்கள் பரிசாகத் தரப்பட்டன. நாடெங்கனும் கோர அடக்குமுறை தாண்டவமாடிய நேரத்தில் அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகா! புரட்சிசெய்ய சமயம் வந்துவிட்டது, வேளை நெருங்கிவிட்டது என்று தப்புக்கணக்கு போட்டுக்கொண்டு தெலிங்கானாவில் 'ஆயுத புரட்சி' நடத்தியது! இதுதான் சமயம் என்று காத்திருந்த பாசிச படேலின் துப்பாக்கிகள் அதிர்வேட்டுக்களை கிளப்பி கலகங்களை அடக்குவதாகக் கூறிக் கொண்டு பாமரர்களை கொன்று குவித்தது. கம்யூனிஸ்டுகள் பயனேதும் காணாது படுதோல்வியுற்றனர்.

இந்த கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்த வாய்ப்பும் வசதியும் வேறுயாருக்கும் கிடைத்திருக்குமானால் இந்நேரத்தில் நாடு சமதர்ம பண்ணையாக மாறியிருக்கும். பார்மோசாவில் ஓடி ஒளிந்துகொண்ட சியாங் கும்பலுக்கு துணையாக இணையாக நேரு பண்டிதரும் அவரைச் சார்ந்த ஆதிபத்தியவாதிகளும் அந்தமானில் அல்லவா இன்று குடியிருப்பர். இவ்வாறு கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் கொள்கை குழப்பத்தில் சிக்கியிருந்த கம்யூனிஸ்டுகள் கைநழுவ விட்டனர்.

சென்ற பொதுத்தேர்தலின் போதுகூட கம்யூனிஸ்டுகள் ஆங்காங்கே வெற்றிபெற்றதின் மூதன்மையான காரணம், நாட்டு மக்கள் காங்கிரஸின் மேல் கொண்டிருந்த வெறுப்பால் விளைந்ததே அன்றி இந்நாட்டு கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளால் கவரப்பட்டு அவ்வாறு ஆதரிக்கவில்லை. இதனை மெய்ப்பிக்கும் வகையில் கம்யூனிஸ்டு தலைவர்களான எ. கே. கோபாலன், நாகிரெட்டி போன்றவர்கள் தேர்தல் முடிந்தவுடன், "தேர்தல் முடிவுகள் வியப்பை அளிக்கின்றன' என விடுத்த அறிக்கையே சான்றாகும்.

தேர்தல் வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம், இந்நாட்டில் ஏனைய இடதுசாரிகள், மார்க்ஸியவாதிகள் அனைவரும் தேர்தல் நேரத்தில் நேசக் கரத்தை நீட்டி உதவினார்கள். வடக்கே டாக்டர் ஷெரிபுதின்கிச்லு அருணா ஆசப்அலி, விவசாய—தொழிலாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். மோரே போன்றவர்களும், ஆந்திராவிலும், ஐதராபாத்திலும் டாக்டர் ஜெயசூர்யா, ஹரிந்திரநாத் சட்டோபாத்தியாயா போன்றவர்களும், கேரளத்தில் புரட்சி சோஷலிஸ்டு தலைவரான ஸ்ரீ கண்டன் நாயர், கேரளா சோஷலிஸ்டுகளில் தலைவரான ஜான் மஞ்சுரான் போன்றவர்களும், தமிழகத்தில் பெரியார் இராமசாமி அவர்களும், கம்யூனிஸ்டுகள் திராவிட நாட்டு பிரிவினையை ஒப்பமறுத்து பின் வாங்கிய போதிலும், நமது ஆதரவு பெற்றோர் நிற்காத இடங்களில் கம்யூனிஸ்டுகளை ஆதரியுங்கள் என கண்ணியத்துடன் கூறி ஆதரித்த அறிஞர் அண்ணா அவர்களும் நேசக் கரங்களை நீட்டியதால்தான் கம்யூனிஸ்டுகள் ஓரளவு குறிப்பிடத்தகுந்த வெற்றியை பெற்று சட்ட மன்றங்களில் புகுந்தனர்.

புகுந்ததும் நன்றி மறந்தனர். ஏறிவந்த ஏணியை எட்டி உதைத்தனர். கடக்க உதவிய படகை கவிழ்க்க எண்ணினர். தாவர நூல் படித்தோர் Parasites என்னும் ஒரு வகை தாவர இனத்தை அறிவர். இவைகள் தன்னந்தனியாக மண்ணில் வளர முடியாதவை. அடுத்துள்ள செடி கொடிகளின் தண்டு பாகங்களைப்பற்றிக் கொண்டுதான் இவை வளரத் தொடங்கும். அதுவும் எப்படித் தெரியுமா? தங்க இடமளித்த செடிகள் பாடுபட்டு தேடிய உணவை இவைகள் உழைக்காமலேயே உறிஞ்சி வாழும். நாளடைவில் தங்க இடமளித்த செடிகள் பட்டு போகும். இதை Parasitic invasion என்பார்.

அதைப்போல இந்த கம்யூனிஸ்டுகளின் போலியான ஒத்துழைப்புக் கொள்கையை கண்ட மற்றவர்கள் தங்கள் ஆதரவைநிறுத்திக் கொண்டனர். அதன் விளைவுதான் இன்று கேரளத்திலும், ஆந்திரத்திலும் கிடைத்திருக்கும் படுதோல்விகள் தமிழகத்திலும்அண்மையில் நடந்த மாவட்டதேர்தல்களிலும், கம்யூனிஸ்டுகள் முன்பு வெற்றி பெற்ற இடங்களில் எல்லாம் இன்று பெற்ற தோல்விகளை நாம் அறிவோம். இந்த சரிவுகள், தோல்விகள் உணர்த்தும் உண்மை என்ன? அதை எண்ணும் அளவிற்கு அவர்கள் மனம், பக்குவம் அடைந்துள்ளதா என்பதில் ஐயப்பாடு தோன்றாமலில்லை. ஏனெனில் அவர்கள் 'மார்க்ஸை' வேத புத்தகமாகக் கொண்டிருப்பவர்கள். நாமோ அதை ஆராய்ச்சி நூலாக கொண்டிருக்கிறோம். எனவே வளருகின்றோம். இந்த பேருண்மையை கம்யூனிஸ்டுகள் ஏனோ உணர மறுக்கிறார்கள். பிரகாசம், பட்டம் தாணு, போன்ற பிற்போக்காளர்களுடன் கைகொடுத்து குலாவ தயாராக இருக்கின்றார்களே தவிர, முற்போக்காளராகிய நம்முடன், இந்த நாட்டின் உண்மையான சமதர்ம வாதிகளாகிய திராவிட இயக்கத்தினிடம் இணைந்துபோக, நமது இலட்சியத்தைப் புரிந்து கொள்ளக்கூட மறுக்கின்றார்கள். மறுத்தாலும் பரவாயில்லை. நம்மை இழித்தும் பழித்தும், ஏசிப்பேச கிளப்பி விடுகிறார்கள். மார்க்ஸிஸம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு புரிய வைப்பதை விட்டுவிட்டு மனிதத்தன்மையை மறந்து மற்றவர்கள் மேல் வசைபுராணம் பாடும் பணியில் ஈடுபட்டதன் பலன்தான் இன்றைய ஆந்திரத் தோல்வி.

நாட்டு பிரச்னைகளில் நாட்டம் கொள்வதை விட்டுவிட்டு அகில உலக பிரச்னைகளை அலசுவதில் இந்த சர்வ தேசியங்கள் ஈடுபட்டு, ஆகா! நீங்கள் குறுகிய நோக்கம் படைத்தவர்கள், என நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட நல்ல மனம் படைத்தோரை குற்றம் சாட்டி கொள்கையற்று போனதன் விளைவுதான் இன்றைய சரிவுகள்.

இன்னும் சின்னஞ் சிறு தேசமான கொரியாவை இருகூறாக போட சம்மதித்த போது எழாத எண்ணம், இனமொழி, கலாச்சாரங்கள் ஒன்றுபட்டிருந்த ஜெர்மனியை நான்கு கூறுகளாக போட்டபோது உண்டாகாத பதைபதைப்பு, பர்மாவில் கரேன்ஸ்தான் வேண்டும் எனப்போரிடும் கரேனியர்களுக்கு பர்மிய கம்யூனிஸ்டுகள் ஆதரவளிப்பதைக் கண்டு உண்டாகாத சினம், நம்மீது திராவிடப் பிரிவினை கோரும் போது மட்டும் பீறிட்டுக் கிளம்பி "பரத கண்டத்தை பிரிக்கலாமா பாவிகளே என்று கொள்கையற்று பேசியதின் பலன்தான் இன்றைய தோல்விப் படலங்கள்.

வேளைக்கொரு கொள்கை, நேரத்திற்கு ஒரு வேஷம் புனைந்து, வெளியே கல்வித் திட்டத்தை எதிர்த்து கோஷமிட்டுவிட்டு, உள்ளே சட்டசபையில் சொன்னதை செயலாற்றும் கட்டம் நெருங்கியபோது, வாக்களிக்காது வெளியேறி ஆச்சாரியாருக்கு உதவி புரிந்த இராமமூர்த்திகள் கம்யூனிஸ்டு கட்சியில் பெருகியதால் உண்டான விளைவுதான் இன்றைய மாபெரும் சரிவு.

பைந்தமிழர் மத்தியில் பட்டம்தாணுவை ஒழித்துக் கட்டுவோம் என கர்ஜனை எழுப்பிவிட்டு திரைமறைவில் சலுகை பெற்று, பின்னர் பட்டம்தாணுக்களை ஆதரித்த திடீர் பல்டிகளில் பலன்தான் இன்றைய நிலை.

கொடுங்கோலனும் பீட்டரின் பெயரால் இயங்கிவந்த பீட்டர்ஸ்பர்க் நகரம் மாவீரன் லெனின் திருப்பெயரால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று நாட்டுணர்ச்சி உந்தித் தள்ள லெனின்கிராட் என பெயரிட்டு ரஷ்ய மக்கள் அன்புடன் அழைப்பதை கண்கூடாகக் கண்டிருந்தும், பர்மோசா பெயர் பிடிக்கவில்லை எமக்கு, அது ஆதிபத்தியவாதிகள் இட்ட பெயர், எனவே எமது இதயங்கனிய தைவான் என அழைக்கிறோம் அந்த பவளத் தீவை என சீன பெருமக்கள் கூறுவதை கேட்ட பின்னும். இந்த நாட்டு கம்யூனிஸ்டுகள் "கல்லக்குடியாம், பெயர்மாற்றமாம், அது சோறு போடுமோ" என துடுக்குச் சொல் வீசியதின் பலன்தான் இன்றைய தோல்வி துடிதுடிப்பு.

நீண்டு கொண்டு போகும், இந்த இரட்டை நாக்கு படைத்தோரின் கொள்கையற்ற செயல்களின் பட்டியல், எனவே இத்துடன் நிறுத்திக்கொண்டு நிராதரவாக நிற்கும் அவர்களை தோல்வியின் காரணத்தை, சினத்தை மூட்டைகட்டி தூரவைத்துவிட்டு சிந்துக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். திரும்பிப் பாருங்கள் நீங்கள் வந்த பாதையை என அந்த திசை தடுமாறியோருக்கு கூற ஆசைப்படுகிறோம். நாட்டுப் பிரிவினையை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகள் இனியாகிலும் தங்கள் தவறை உணர்ந்து திருந்துவார்களா?

—ப. நெடுமாறன்

உரிமைக் குரல்!

என்னருமைத் தோழா நீ எண்ணிப் பார்
ஏங்குகின்ற திராவிடனே விழித்துப் பார்!
உன்னருமைச் சோதரர்கள் வீதிகளில்
உணவின்றி வாடுகிறார் உன்னிப்பார்!
கன்னலுடன் செந்நெல் விளை நாட்டினிலே
கண்டவர்கள் தின்று கொழுத்தலவுகிறார்
இன்னலினால் உன்னாட்டார் துடிக்கையிலே
எவனெவனோ வாழ்கின்றான் எண்ணிப்பார்!

விந்தியத் தென்புறத்தே பொன்கொழிக்கும்
விளைநிலங்கள் பலசூழ்ந்த உன்னாட்டை
செந்தமிழின் சீர்த்தியினாற் பல்கலைகள்
சிறந்தோங்கிச் செழித்திருக்கும் திருவிடத்தை
மந்தியெனச் சூழ்ந்திருக்கும் வட வரைப்பார்!
மாற்றாரின் காலடியில் எத்தனை நாள்!
சிந்தையினிற் துடிப்பின்றி வாழ்ந்திருப்பாய்?
சிங்கமது சிறுமுயலுக் கஞ்சுவதா!

பண்டொருநாள் கடல் கடந்து வணிகம் செய்து
பார்போற்றும் பேர் பெற்ற தமிழ்க் குடியீர்,
வண்டமிழிற் சிறந்தபெரும் புலவர்க்கெல்லாம்
வாரிவாரிக் கொடுத்திட்ட வள்ளற்குடியீர்
மண்டுபுகழ் இமயத்திற கொடிநாட்டி
மாத்தமிழுக் குயர்வீந்த மறக்குடியீர்
அண்டையிலே சென்றுழைத்துச் சீரழியும்
அவலநிலை உந்தனுக்கா அந்தோ அந்தோ

திண்ணாரும் வல்மைமிகு திராவிடனே
தீயவரின் ஆட்சிக்கொரு முடிவுகட்டி
கண்ணான திராவிடத்தைக் காண்பதற்கு
கச்சைகட்டிச் செயல்புரியத் துடித்தெழு நீ!
புண்ணான நெஞ்சினராயுலவுமுந்தன்
பொன்னான சோதரரை வாழவைத்து
அண்ணாவாம் நமதறிஞர் படையினிலே
அணிவகுத்துத் தனியரசைப் பெற்றிடு நீ!

—சோ. கண்ணப்பன், பேரூர்

ஆந்திரத் தேர்தல் முடிவு

மொத்த இடங்கள் 196

	போட்டியிட்டது	வெற்றி பெற்றது
ஐ. காங்கிரஸ்	... 188	... 146
கம்யூனிஸ்ட்	... 159	... 15
பி. சோஷலிஸ்ட்	... 45	... 13
சுயேச்சைகள்	... 162	... 22
ஜனசங்க்	... 6	... ...

திராவிடன்

சென்னை : 11—3—55 : வெள்ளி

வாய்ப் பந்தலா?

மெய்யுடை ஒருவன் சொல்லமாட்டாமையால் பொய் போலும்மே பொய் போலும்மே, பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே என்பதற் கேற்பவே, இன்றைய ஆட்சிபீடத்தினரின் திருவிளையாடல்கள் காட்சி யளிக்கின்றன.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து நம் மாநில சர்க்காரின் போக்கினைக் கூர்ந்து கவனித்து வருபவர்களுக்கு நாம் கூறும் உண்மைகள் தெரியவரும்.

காங்கிரசார் பதவி ஏற்பதற்கு முன் ஆட்சிமுறையிலே யிருந்துவந்த ஓரளவு நேர்மை, நாணயம் ஆகியவையும் காற்றில் பறக்கவிடப்பட்டு வருகிறது!

நாட்டின் பிரச்னை ஒவ்வொன்றிலும் கூப்பாடு போட்டுப்பேசுவதும் செயல்முறையில் அதற்கு நேர்விரோதமாக நடப்பதும் நேரு சர்க்காரின் சாமர்த்தியங்களில் ஒன்றாக யிருந்து வருகிறது. இந்நிலையில் நமது மாநில ஆட்சிபீடத்தை அலங்கரித்துவரும் அமைச்சர்களைப்பற்றி கூற வேண்டுவதேயில்லை! அரசியல் பொருளாதார உரிமைகளை டெல்லி ஆதிக்க வர்க்கத்தினரிடம் குவித்து வைத்துவிட்டு வரட்டு ஜம்பம் பேசுவதில் மிகச் சமர்த்தா யிருக்கின்றனர்!

1938-ம் ஆண்டு ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சரா யிருந்த காலத்தில்தான் 'சூளை மில்' மூடப்பட்டது. அதனை மீண்டும் துவக்கி வேலை யிழந்தோரின் அவல நிலையைப் போக்க நம் மாநில சர்க்கார் முனையவில்லை. அதற்குப் பதிலாக அதே ஆச்சாரியார் மீண்டும் முதலமைச்சராக பதவி ஏற்ற போது டிராம்வே கம்பெனி திடீர் மூடுவிழா நடத்துவதற்கு துணையாய் நின்றார்! இவ்வளவையும் செய்துவிட்டு ஆச்சாரியார் போன்றவர்கள் அதிதீவிரக் கொள்கைகளைப் பேசுவதும், ஏழை நடுத்தர மக்களுக்காகவே காங்கிரஸ் பணியாற்றுகிறதென்றும் தப்பட்டை அடிப்பதில் மட்டும் குறைவில்லை!

ஆச்சாரியார்தான் இந்தப் பத்தாம் பசலிப் போக்கில் தமது பதவிக் காலத்தை கழித்தாரென்றால், இன்றைய முதலமைச்சர் காமராசர் அவர்களும் தொழிலாளர் பிரச்னை குறித்த விவகாரங்களில் "பழைய சரக்கு புதியமொந்தை" யாகவே நடந்து வருகிறார்!

ஆச்சாரியார் முதலமைச்சரா யிருந்து டிராம்வே தொழிலாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் தவிக்கவிட்ட நேரத்திலே அக்கொடுமையை கண்டித்துப் பேசிய தோடல்லாமல் சர்க்காரே டிராம்வே தொழிலை ஏற்று நடத்தித் தொழிலாளர்களின் அவலநிலையைப் போக்கவேண்டும் என்றும் தோழர் காமராசர் பேசிவந்தார். இன்னும் சொல்லப்போனால் அத்தொழிலாளர்களின் தூதுகோஷ்டியிடம் இதற்கான செய்வதாகவும் அன்று உறுதி கூறியிருப்பதை காமராசர் அவர்களே மறுக்கமாட்டார் என்று நம்புகிறோம்.

ஆனால் இன்று அத்தொழிலாளர்கள் கண்ட பலன் என்ன? அன்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராகயிருந்த காமராசர்தாம் கொடுத்த வாக்குறுதியை—சர்க்காரை நடத்திச்செல்லும் பொறுப்பு என்னிடமிருந்தால் டிராம்வே தொழிலை அந்த சர்க்காரே ஏற்று நடத்தும்படி செய்வேன் என்று மார்தட்டிப் பேசி தொழிலாளர்களுக்கு அளித்த நம்பிக்கையை—இன்றுவரை நிறைவேற்றினாரா என்று கேட்கிறோம்.

அதற்குப் பதிலாக—தமது குழுவிலேயுள்ள மற்ற அமைச்சர்களைக் கொண்டு டிராம்வே தொழிலை சர்க்கார் நடத்தினால் நட்டம் ஏற்படக்கூடும் என்று பேசிடச் செய்தார்.

அதுமட்டுமா, பஞ்சாலைத் தொழிலாளர் குமுறலையும் நினைவூட்ட விரும்புகிறோம். இப்பிரச்னையில் தொழிலாளர்களின் வேண்டுகோள்தான் சர்க்காரின் செவிகளில் ஏறியதா? ஆகவே தொழிலாளர் நடுத்தரமக்களைப்பற்றிய பிரச்னையில் காங்கிரஸ் சர்க்காரை யார் நடத்திச் சென்றாலும் பலன்மட்டும் பூஜ்யம்தான்!

இந்நிலையில் சென்னை மாநில அமைச்சர்கள், நிலச்சீர்திருத்த சட்டம் விரைவிலே வரப்போகிறது—அதற்குப் பின் ஏழை விவசாயிகளுக்குத் தொல்லையே யிருக்காது என்று உரத்தகுரலில் பேச முனைந்துள்ளனர். இந்தக் கூச்சல் கடந்த மூன்று ஆண்டுகளாகவே போடப்பட்டு வருவதை அனைவரும் அறிவர்.

ஏழை மக்களின் தொல்லைகளைத் தீர்க்க சட்டம் கொண்டு வருகிறோம் என்று காங்கிரஸ் சர்க்கார் கூறிவந்த பிரச்னைகள் அனைத்திலும், அவர்கள் நிறைவேற்றியுள்ள அச்சட்டங்கள் ஏழை மக்களை பாதிப்பதாகவே யிருந்து வருகிறதே யல்லாது ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வை உறிஞ்சி வாழும் முதலாளித்துவத்தை அதற்குத் துணையாய் நிற்கும் தியசக்திகளை ஓரளவாவது அசைக்கக் கூடியதாய் இல்லை.

எனவே காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வர யிருக்கும் நிலச்சீர்திருத்த சட்டமும், வாய்ப்பந்தல் மாடலில்தான் இருக்குமா அல்லது விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தொல்லையைப் போக்கக் கூடியதா யிருக்குமா என்பதும் விரைவில் தெரியத்தான் போகிறது.

நிற்க, சென்னை மாநில சர்க்கார் தங்களுக்குள்ள அரசியல் பொருளாதார உரிமையை 'ஏகஇந்தியா' என்ற பேரால் வடநாட்டு ஆதிக்கத்தினிடம் ஒப்படைத்து விட்டு, நம் மாநில மக்களின் வாழ்வினை நலியச் செய்வதும், தங்களுக்கு உரிமையில்லாத அவகேட்டினை மறைக்க வாய்ப்பந்தல் போடுவதும் விவேகமாகாது என்பதுடன் இந்த வாய்ப்பந்தல் வித்தையில் நீண்ட காலத்துக்கு மக்களை ஏய்க்கவும் முடியாது என்பதையும் சென்னை மாநில சர்க்காருக்கும் குறிப்பாக முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்று அந்நியர் ஆட்சியிலிருந்து நாடு விடுபட பெரிதும் பாடுபட்டவர்கள் பாட்டாளி மக்களே யாவர். அந்த உரிமையில் சதந்திர நாட்டிலே சுகவாழ்வு கிடைக்கும் என்று எதிர்நோக்கி நின்றனர். ஆனால் இன்று காண்பதென்ன? வெள்ளையர் ஆதிக்கத்திலே—இரட்டையாட்சி முறையில் சர்க்காரை இயங்கவைத்த நீதிக்கட்சியினர் அன்று தொழிலாளர்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் செய்த நன்மைகளைக் கூட காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ளதாக கூறுவதற்கில்லை.

அன்றைய நீதிக்கட்சித் தலைவர்கள் ஓரளவு நன்மைகள் புரிந்திருப்பினும் அதை மக்களிடத்திலே எடுத்துக் கூறும் வாய்ப்பு பெற்றில்லாத காரணத்தினாலே அவர்கள் தேசத் துரோகிகளாக பழிக்கப்பட்டனர். இன்றைய ஆளவந்தார்கள், வாய்ப்பந்தல் போடுவதிலே "சக்தி" பெற்றிருப்பதால் அவர்கள் செய்யும் நேர்மாறான செயல்களை மறைத்து தாங்கள்தான் கடைந்தெடுத்த தேசபக்தர்கள் என்று கூப்பாடு போட்டு வருகின்றனர்.

இந்த வாய்ப்பந்தல் வித்தை மேலும் நீடிக்குமானால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க மக்களின் மகத்தான சக்தி உருவாகி வருகிறதென்பதை காங்கிரஸ் சர்க்கார் தங்களின் புத்தியில் பதியவைத்து ஏழை—நடுத்தர மக்களின் பிரச்னைகளில் இனியாகிலும் நேர்மையுடன் நடக்க வேண்டுகிறோம்.

நடக்க இருப்பவை

கோட்டைக்குப்பம் தி. மு. க. துவக்க விழா

13—3—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு கடைத் தெரு பள்ளிவாசலுக்கருகில் துவக்க விழாக்கூட்டம் நடைபெறும். தோழர் ரா. ராசசேகரன் தலைமையில் என். வி. நடராசன், எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. சித்தார்த்தன் பி. ஏ. பேசுவர். மாலை 5-மணிக்கு கழகத் திறப்புவிழா நடைபெறும்.

விருதம்பட்டு தி. மு. கழகம்

13—3—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு பிள்ளையார் கோயில் வீதியில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

நெல்லை நகர தி. மு. கழகம்.

13—3—55 ஞாயிறு மாலை 7-மணிக்கு நெல்லை சந்திப்பு ஆற்று மணல் பரப்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

திருவெண்காடு தி. மு. க. 3-வது ஆண்டுவிழா

14-3-55 திங்கள் மாலை திருவெண்காடு தேரடியில் நடைபெறும். தோழர்கள் ஈ. வே. கி. சம்பத். என் கிட்டப்பா, கே. எஸ். சௌந்திரராசன் ஆகியோர் பேசுவர்.

வடக்குமாங்குடி தி. மு. கழகம்

வடக்குமாங்குடி மேலத் தெருவில் தோழர் பூராசாமி தலைமையில் 15-3-55 செவ்வாய் அன்று நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆர் பாலகுருசாமி, என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்திரராசன் ஆகியோர் பேசுவர்.

ஓரமங்கலம் தி. மு. க. துவக்க விழா

17—3—55 மாலை 5-30 மணிக்கு பழைய சினிமா கொட்டகையில் துவக்கவிழா கூட்டம் தோழர் கொ. ப. சுப்பையா தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஈ. வெ. கே. சம்பத், பேராவூரணி அடைக்கலம், ம. ரா. மணிமொழி ஆகியோர் பேசுவர். ம. சொ. சிவகுருநாதன் கழகக் கொடியை ஏற்றுவிப்பார்.

டாக்டர் பி. வி. என்.

பச்சையப்பன் கல்லூரியின் தலைமைப் பேராசிரியராகவும், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், சென்னை அரசாங்க பொருளாதார ஆலோசகராகவும் அடுத்து இந்திய காப்புவரி போர்டின் உறுப்பினராகவும், இறுதியாக வரித்தா பேரக் குழு தலைவராகவும் பணியாற்றிவந்த பொருளாதார நிபுணர் டாக்டர் பி. வி. நாராயணசாமி (நாயுடு) அவர்கள் 5—3—55-ம் நாள் ராஜ்கோட்டில் (தமது அலுவல்களின் சுற்றுப் பயணத்தின்போது) இயற்கையெய்தினார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம். வருந்தினோம்.

திராவிடம், உண்மையிலேயே சுதந்திரம் பெற்றிருக்குமானால், டாக்டர் நாயுடு அவர்களின் அறிவாற்றலால் எவ்வளவோ பயனடைந்திருக்க முடியும். எனவே இன்று இவரது திறமை இந்திய அரசியலாருக்குப் பெருந்துணை புரிந்திருக்கிறது. எனினும் அகில உலக அரங்கிலே டாக்டர் பி. வி. என். அவர்கள் திராவிடத்தின் தலைசிறந்த பொருளாதார அறிஞர் என்ற புகழை அடைந்திருக்கிறார்.

இவ்விதப் புகழும் பண்பும் கொண்ட டாக்டர் பி. வி. என். அவர்களின் பிரிவுக்கு நாம் வருந்துவதுடன் நமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேராசிரியர் பேசுகிறார்!

வி. சுந்தரராசன், சங்கரன் பயிற்சி பள்ளி.

நெஞ்சம் கலங்கிப் புண்பட்டு உயிர்விட்டவர்களின் பட்டியலைப் பத்திரிகையில் பயின்ற போதும், மேடைப் பேச்சுக்களில் கேட்டபோதும் கோழைகள், வாழத் தெரியாதவர்கள் என்பன போன்ற விளக்கங்கள் தந்த நாட்களும் என் வாழ்க்கைக் குறிப்பில் தென்படுகின்றன; அதே வாழ்க்கைக் குறிப்பிலே தான் என் மனப்புண்ணையும், கேவலம், மாற்றார் கண்டு கோழையுள்ளம் என்று சொல்லுதற் கொல்லும் சொற்களையும் காணுகிறேன். மகிழ்ந்த உள்ளத்தோடு மட்டும் நாட்குறிப்பு எழுதுவதில்லை; மனம் உடைந்தும் எழுதுகிறேன்.

அவலம் தோய்ந்த விழிகள் எழுதும் எழுத்துக்களை மறைப்பதோடு மட்டுமன்றி, எழுதும் எழுத்துக்களையும் சிந்தும் கண்ணீரால் அழித்து விடுகின்றன. கண்ணீர் பெருகக்கூடிய அளவுக்குக் கவலை தென்படாத வாழ்க்கை ஆசிரியப் பணி ஒன்றுதான் என்று சொல்லுகிறார்கள்; அவர்கள் உண்மையைப் பொய்யாக்க இதோ என் விழிகள் கண்ணீரே சான்றாக அமைந்து விட்டது.

வாழத் தெரியாத காரணத்தாலோ, வாழ்ந்து கெட்ட காரணத்தாலோ அல்ல, நான் கவலை தோய்ந்த கண்களுடன் குறிப்பு எழுதுவது என்கடமையில் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் கலங்குகிறேன். இது பிறர்பணியாற்றுவோருக்குக் கொஞ்சம் விந்தையாகத்தான் இருக்கும்.

வகுப்புக்குப் போவதையும் மறந்து ஆசிரிய மன்றத்தில் தொடர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டே இருந்து விட்டேன். அன்று இடைநிலை வகுப்புக்கு உள்ளில் பாடம் நடக்க வேண்டிய வகுப்பையும் மறந்து விட்டேன். எனக்கு அடுத்த வகுப்புப் பேராசிரியத் தலைவர் வகுப்பு. வகுப்பில் ஆசிரியர் இல்லாத காரணத்தால் எழுந்த கூக்குரலை அவர் தாங்கவில்லை போலும். ஏதோ ஞாபகம் வந்து வகுப்புக்கு விரைந்து வந்து விட்டேன். நேர தாமதமாகத்தான் வகுப்புக்குச் சென்றேன் கடமையை மறந்துதான் இருந்துவிட்டேன், பிழையைஉணருகிறேன். கடமை மறந்து ஆசிரிய மன்றத்திலேயே பத்திரிகைப் படிப்பில் ஆழ்ந்து விட்டோமே என எண்ணி மிகவும் கசிந்தேன். வகுப்பினுள் வந்த பிறகும் மாணவர்கள் அமைதி குலைந்து இருந்தது மடமைதான். எனக்குப் பி.ஏ. வகுப்பைப்பற்றிக்கூட அவ்வளவு கவலை இல்லை;

இடைநிலை வகுப்பு மாணவர்களைப் பற்றி நான் பொறுப்புணர்ச்சியோடு ஒன்றித்த கவலை கொள்கிறேன். கடமை மறந்து காலத்தைக் கழிக்கும் பழக்கத்தை கல்லூரிக்கு வந்தும் மாற்றிக் கொள்ளும் பண்போ சூழ்நிலையோ அமையப் பெறாதவர்கள் அவர்கள். அமைதி குலையும் போதெல்லாம் மாணவர்களை கண்டிப்பதுண்டு, அவர்கள் மீது சினந்து கொண்டவனைப் போலவும் நடிக்கிறேன். ஆனால் அன்று அவர்கள் நடந்து கொண்ட நெறியை நினைத்தாலே கலங்குகிறேன். வகுப்பில் கூக்குரல் அதிகரித்ததால் பேராசிரியத் தலைவரே வகுப்பில் வந்து மாணவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றி கடிந்து சொல்லிவிட்டுப்போனார். அதன் பிறகுதான் அமைதியைக் கண்டேன்.

பேராசிரியத் தலைவர் வருவதற்கு முன் அமைதி குலைந்திருந்த மாணவர்கள் அவர் வந்தவுடன் அமைதியாகிவிட்டார்கள். ஆனால் என்மனமோ அமைதி பட்டிருந்த உள்ளம் அவர் வந்தவுடன் தான் கொந்தளித்தது. நான் வகுப்பினுள் இருக்கும்போதே வேறொரு ஆசிரியர் என் வகுப்பு மாணவர்களுக்கு நெறி புகட்டுவது என் சொந்த மனையாளுக்கு பக்கத்து வீட்டுக்காரன் என்னிடம் நடந்து கொள்ளவேண்டிய பண்பைக் கூறுவதைப்போல் இருந்தது.

பத்து ஆண்டு காலம் உள நூல் பேராசிரியராக இருந்தும் என் வகுப்பு மாணவர்களின் உள்ளத்தில் அமைதியை நிலவ வேறொருவர் துணை டலவோ வேண்டியிருக்கிறது. உள நூல் கற்ற அளவுக்கு மாணவர்களின் உள்ளத்தைக் கற்றுக்கொள்ள இயலவில்லையே என வருந்தினேன் கொஞ்சம் பிணங்கினேன். ஆனால் முழுதும் வேற்றுமை வளர்த்துக் கொள்ளவில்லை. இரவு 12 மணி வரையிலும் கூடக் கண் விழித்து இவர்கள் நலனுக்காக குறிப்பு எடுக்கிறேன், எல்லா மாணவர்களும் கல்லூரித் தேர்வில் மட்டுமல்ல வாழ்க்கைத் தேர்விலும் வெற்றிபெறுவதற்கான வழிகளில் என் சொற்பொழிவுகளை அமைத்துக் கொள்கிறேன், எல்லா மாணவர்களும் பயன் பெறுவதற்கான முறையில் சொற்பொழிவுகளை அமைத்துக்கொள்கிறேன். எல்லாமாணவர்களும் பயன் பெறுவதற்கான சொற்பொழிவு செய்கிறேன். உணர்ச்சியாக உள நூல் சொற்பொழிவு செய்யும் போது மாணவர்கள் தன்னையே மறந்துவிடும் பண்பையும்உணருகிறேன். இருந்தும் பயன் என்ன?

ஒரு நாள் மறந்து நேர தாமதமாக வகுப்புக்கு வந்த எனக்குப் பேராசிரியத் தலைவர் மூலம் பெறுமதிப்புப் பெற்றளித்து விட்டார்களே!

அவர்கள் மாணவர்கள் தான்; அவர்களுக்கு வேண்டியது வகுப்புப்பாடம் விறுவிறுப்பாக இருந்தால் போதுமானது. தேர்வு காலத்தில் வரும் முக்கியமான வினாக்களும், ஒரு மணி நேரமும் ஒரு வினாடியாகக் கழியும்படியான உணர்ச்சிமிகுந்த சொற்பொழிவோடு மாணவர்கள் நின்று விடுகிறார்கள். இதுவே அவர்கள் கடமை என்று எண்ணும் மாணவர்களும் உண்டு. ஆனால், எனக்கோ, மாணவர்களிடையே மட்டுமல்ல; பேராசிரியர்களிடையே கூட சம மதிப்பு வேண்டும்; என் தகுதியை நான் விட்டுக்கொடுத்தால் கல்லூரியே ஒருமுகமாகத் தூற்றும். தகுதியை விட்டுக் கொடுக்காமல் இறுகப் பிடித்து, அவ்வழியில் இயங்கிச் சென்றால் அராஜகப் பாதையில் இயங்குகிறேன் எனறு சொல்லும் இதே மாணவர்கள் தான் நானே தரன் தகுதியை விட்டுக் கொடுத்தாலும் அறுகதை அற்றவன் என்று தூற்றி விடுவார்கள்.

ஒருவாறு என் மனதில் பட்டதை சொல்லிக் கொடுத்து விட்டு மணி அடித்தவுடன் மாணவர்களுக்கு முன்பாகவே நான் வகுப்பினின்று பிரிந்து வந்தேன். எனக்குப் பின் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த மாணவர்கள்தான் முன்பு வந்திருக்க வேண்டும் "ஆசிரியரோ வென்றால் இரவல் பாடமாகக் கற்பிக்கிறார்; உழைப்பதற்கு மேலே 30 நாள் எண்ணியபின் ஊதியமல்லவா வாங்குகிறார். நேரத்திற்கு வராமல் என்ன வேலையாம் அவருக்கு" என்று என் காதில் பட்டும் படாதது போல் சொன்னான், உண்மைதானே! அவன் ஊதியம் தருகிறான். அவனுக்கு நான் உழைக்கிறேன்—முற்றிலும் உண்மைதான்.

ஊதியம் பெறக்கூடிய அளவுக்கு ஒரு பேராசிரியர் தனக்கு உழைப்பதில்லை என்பதை மாணவன் ஒருவன் உணருகிறான். உழைப்பைப் பயன் படுத்திக் கொள்ளும் வகையை உணரா விட்டாலும் தனக்கு உழைக்கிறவன், தான் அளிக்கும் ஊதியத்திற்கேற்ற அளவிற்கு உழைக்கவில்லை என்பதை யாவது உணர்ந்து இருக்கிறான்.

ஒரு நாள் நேர தாமதமாக வகுப்புக்குச்சென்ற எனக்கு இந்தத் தண்டனை; ஊதியம் பெறும் அளவுக்கு உழைப்புக் கேட்கிறான் மாணவன் உழைக்க வந்த உனக்கு வகையாக உழைக்கத் தெரிய வேண்டும் என்பதைக் கற்பிக்கின்றார் பேராசிரியத் தலைவர்; இப்போதுதான் என் கண்களில் தேம்பித் தேம்பி நீர் வழிந்தது. 'நான் உழைக்கவில்லை' என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். இரவு 8 மணியிலிருந்து 12 மணி வரையிலும் குடிகாரனைப் போல் டீயும் காப்பியும் குடித்துக் கொண்டே இடைநிலை வகுப்புகுறிப்புத் தயாரித்து நடத்தும் சொற்பொழிவிற்கான நூல்களைப் படித்துக் கொள்ளுகிறேன். அதன் பின்னர் காலை 4 மணியிலிருந்து 7 மணி வரையில் பி. ஏ. வகுப்புக்குப் பாடம் தயாரித்துக் கொள்கிறேன், பகல் முழுவதும் கல்லூரியில் உழைக்கிறேன். மாணவனாகப் பயின்ற காலத்தில் கூட இவ்வாறு உழைக்கவில்லை; ஆசிரியப்பதவி ஏற்ற பிறகு தான் உழைக்கவே கற்றுக் கொண்டேன். இந்த உழைப்புதான், தான்தரும் ஊதியத்திற்குப் போதாது என்று மாணவனே சொல்லுகிறான்.

ஒரு நாள் வேலைக்குச் சென்றுஉழைக்காத எனக்கு இவ்வளவு கவலை தரும் செய்திகள் வருகின்றன. ஆனால் காலமெல்லாம் உழைக்காமலே வாழ்கிறார்களே அவர்களுக்கு இப்படி கேட்க ஆள் யாரும் இல்லையோ!

ஊதியம் பெறுதற் கேற்ற உழைப்பு தேவை என்ற கோரிக்கையை நான் மாணவர்களிடம் கேட்டுணர்ந்த பிறகு தான் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தேன். இப்போதுதான் என் உள்ளம் கூட விரிந்தது.

வீட்டிலேயே போனுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு எந்த உழைப்பும் உழைக்காத பக்கத்து வீட்டு முத்தையா புரோக்கர் வேலை செய்துஆயிரக் கணக்கில் சம்பாதிக்கின்றாரே! உடல் உழைப்பு ஏதும் இல்லை; மன உழைப்பும் குறைவுதான்; இருந்தாலும் ஊதியம் மட்டிலும் மாதத்திற்கு ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கிறார்! ஒருவரிடம் உள்ள பண்டத்தை வாங்கி வேறு எங்கோ ஒரு ஊரில் உள்ளவனுக்கு விற்பதுதான் அவரது வேலையாம். முன்பின் பண்டத்தை பார்ப்பதுகூட இல்லை. வீட்டினுள் இருந்துகொண்டே இத்தொழிலைச் செய்கிறார். ஊதியம் பெறக் கூடிய அளவுக்கு உழைப்பதில்லையே ஏன் என்று கேட்க அவர் நடத்தும் துறையில் மாணவர்கள் யாரும் இல்லையோ? என்றே எண்ணுகிறேன்.

என் மனைவியை எனக்கு வாழ்க்கைப் படுத்தி வைப்பதற்கு முன்புகூட எழு வயதுகூட நிரம்பாத என் மைத்துணன் என் மாமியாரிடம் சொன்னானும்.

'ஏனம்மா! தங்கக் கடை வைத்துக் கொண்டு கோடிக் கணக்கில் சம்பாதிக்கும் பட்டணத்து மாமா மகன் ராஜரெத்தினத்திற்கு நம்ம அக்காளை வாழ்க்கைப் படுத்தினால் எவ்வளவோ சொத்தோடு இருக்கலாமே! இருந்தும் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தக் கூட ஊதியம் பெற இயலாத ஆசிரியருக்கா அக்காளை வாழ்க்கைப் படுத்துவது, வேண்டாம்! என்று சொல்லித் தடை செய்தானும். உலகம் உணரா அந்தப் பிஞ்சு உள்ளத்தில்கூட ஊதியம் பெறத் தெரியாத தொழில் ஆசிரியத் தொழில் என்ற எண்ணம் படிந்திருக்கிறது. ஆனால் கல்லூரியிலோ மாணவர்கள் உழைப்புப் போதாது என்கிறார்கள்.

இப்போதுதான் என்தொழிலை வேறு தொழில்களோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது, அதிகம் உழைக்கிறோம். உழைப்பைக் குறைக்க வேண்டும். என்பதற்காக ஒப்பிடவில்லை உழைப்பின் தராதரத்தை உணரவே முன்வந்தேன்,

உலகில் வணிகர்கள் மட்டும் செல்வந்தர்களாக இருக்கிறார்களே ஏன் என எனது நண்பரும பௌதிகப் பேராசிரியருமான வேலாயுதம் அடிக்கடி ஆசிரியர் மன்றத்தில் பொருளாதாரப் பேராசிரியரைக் கேட்பதுண்டு. பொருள் திரட்டும் நுணுக்கம் வணிகர் (Merchant) களுக்குத்தான் தெரியும் என்று சொல்லிக்கொண்டு பொருளாதார நூல்களின் திறனைக்கூறிக்கொண்டு பெருமை அடைவதுண்டு

குறைந்த விலைக்கு வாங்கி நிறைந்த விலைக்கு விற்கும் திறமை உள்ள வணிகனே செல்வம் கொழிக்க முடியும் என்று பொருளாதாரப் பேராசிரியர் ராமமூர்த்தி கூறுகிறார். உண்மைதான் அப்போதுதானே அதிகப் பொருள் திரட்ட முடியும். ஊதியம் ஒன்றுதான் எனக்குக் குறிக்கோள் என்று எண்ணாமல் தொழில் செய்தபோதே கல்லூரியில் குறை சொல்கிறார்கள். ஆனால் வணிகனுக்கோ ஊதியம் ஒன்றே குறிக்கோளாக இருக்க வேண்டுமாம்., வணிகர்களுக்கு அச்சலுகையை பேராசிரியர் இராமமூர்த்தியே தருகிறார். பணமே கண்ணாக இருக்கப் பழகவேண்டுமாம்; நிறையப் பணம் திரட்டும் பண்பை உணர்ந்துவிட்டால் நாடு முன்னேறும் என்றும் மாணவர் கூட்டத்தில் பிரசங்கம் செய்கிறார். ராயல சீமைப் பகுதியில் பஞ்சத்தினால் உணவு கிடைக்காமல் ஏங்கி வழிந்த மக்களுக்கிடையே ஒரு சில வியாபாரிகள் தஞ்சை யாவட்டத்தில் 10பொற்காசுக்கு (10Rupees) வாங்கி 60 பொற்காசுக்கு விற்றார்களாம். இந்த வியாபாரிகள்தான் செல்வத்தின் அருமையை உணர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு பெருமை அடையும் இராமமூர்த்திக்கு என்ன பதில் சொல்ல முடியும்! வியாபாரம் வியாபாரம்தான், வியாபாரி வியாபாரிதான்' என்று மட்டும் வேதாந்தம் பேசுகிறார்.

பொதுநலனைப்பற்றிக் கவலைப்படாமல் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதுதான் தொழில் என்று நான் மட்டும் எண்ணியிருந்தால் இவ்வளவு தூரம் அழுது வடிந்த முகத்தோடு நோட் குறிப்பு எழுத நான் முன்வரமாட்டேன். பணம் ஒன்றே குறிக்கோள் என எண்ணி யிருந்தால் மாணவர்களின் ஒழுக்கத்தைப்பற்றி ஏன் கவலைப் படவேண்டும்? தனியே மாணவர்களை அழைத்து பாடம் கற்பிக்கச் செய்தோ குறிப்பு நூல்கள் எழுதி வெளியிட்டோ ஊதியம் திரட்ட முடியும், வணிகர்களுக்கமைந்த அந்தத் துணிந்த எண்ணம் என்னைப் போன்ற பேராசிரியர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்றே சொல்வேன்.

என்னோடு பயின்றவர் தான்கந்தசாமி. பொறி இயற்கல்லூரியில் பயின்று உயர்ந்த என்ஜினியராக ஆகிவிட்டார். கொஞ்ச நாட்களுக்கு முன் தேநீர் விருந்தில் சந்தித்தபோது அவரே என்னிடம் இந்த ரகசியத்தைச் சொன்னார். விமான நிலயம் கட்டுவதற்காகத் திட்டம் திட்டிக்கட்டியபோது சிமெண்ட் காங்க்ரீட் போட்ட தரை அமைப்பு அமைப்பதற்குப் பதிலாகக் களிமண் அமைப்புத் தரை ஆக்குவித்து சிமெண் தரை அமைப்பு எனக் கணக்குக் காட்டியதில்லை 20 லட்சம் ரூபாய் சம்பாதித்தாராம். இனி பொருளைப் பற்றிக் கவலையே இல்லையாம்! துணிந்து இதைச் செய்து இருக்கிறார் என்பதைக் கேட்டபோது திடுக்கிட்டுப் போனேன், உட்

12-ம் பக்கம்

பெருமூச்சுகள்!

சிறுகதை — "திமுகப்பித்தன்"

எரிகின்ற வெய்யிலின் கொடுமையால் நாங்கள் மிகவும் தளர்ந்துவிட்டோம் கொடுங்காற்றே, இவ்வெப்பத்தைத் தணிக்க நீ உன் தாவளத்திலிருந்தும் புறப்பட்டு வந்தால், ஆகாயத்திரையை மறைத்து நிற்கின்ற கரிய மேகங்கள், திசைகள் அலறிப் புடைக்கின்ற கர்ஜனைகளுடன் நீங்கள் புறப்பட்டால்...இந்தப் பூமிக்கு அதனுடைய தொண்டைக்குழி நனைந்து குளிர்ச்சியடைவதற்கு ஓர் பெருமழை வெகு விரைவில் பெய்துவிட்டால்...!

*

புதிய ஓர் சமுதாயத்தை அமைக்க நாங்கள் ஒன்று சேர்ந்து விடுவோம், சாவுக்காக வாழ்வதற்கு நாங்கள் விரும்பவில்லை; ஆனால் வாழ்வதற்காக சாவதற்குத் தயார்தான். எங்களுடைய கடைசி திட்டந்தான் புரட்சி! அதைத் தொடங்கிவிட்டால் வெற்றியோ தோல்வியோ எதுவேண்டுமானாலும் நேரிடட்டும்! வெற்றி பெறுவதற்கான தோல்விகள் தோல்விகளாகமாட்டா! நாங்கள் வீழ்ந்திருக்கிறோம்! பலமுறை வீழ்ந்திருக்கிறோம்! ஒவ்வொரு தோல்வியிலும் அதன் காரணங்களை நாங்கள் புரிந்துகொள்வோம். உண்மை இதுதான்—போராட்டம்! வாழ்க்கைக்காகப் போராட்டம்! போராட்டத்தில் பங்கு கொள்ளும் எந்த உயிரும் வளர்வதில்லை. அது ஒன்றும் தெரிவதில்லை! தெரிவிப்பதும் இல்லை!

*

அமைதிக்கும் அமைதியின்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடு மிகப் பயங்கரமானதுதான்! ஒன்று வாழவேண்டும்; இல்லையேல் வாழ்க்கைக்காகச் சாகவேண்டும்! வாழ்வு நசுக்கப்படும்போது சாவு நமக்குப் பெரிதல்ல! அந்தச் சாவு எவ்வளவு மேன்மையுடையதாயிருக்கிறது! அந்த வீர மரணத்திலிருந்தும் வாழ்க்கைத் துடிப்பின் ஓசை அதோ கேட்கிறது! அந்த ஒவ்வொரு துடிப்பிலும் வாழ்க்கையின் உரிமைக் கோரிக்கைகள் கேட்கின்றன.

கொடுமையான வெய்யில், குளிர்மையான கடல்! அசைந்தாடிக் கொண்டிருக்கிற அலைகள் குன்றுகள் போன்று உயருகின்றன! அபாயம் நிறைந்த வாய்க்கால்களில் படகுகள் நீந்திக் கொண்டிருக்கின்றன! சில படகுகள் பின்னால் வந்து கொண்டிருக்கின்றன. உற்ற நண்பர்கள் சிதறிக் கிடக்கின்றார்கள்! படகோட்டியைப் பற்றித்தான் எங்களுக்குச் சந்தேகம்! எல்லோரையும் ஒன்று சேர்த்து இவைகளை முன்னால் கொண்டு செல்ல முடிந்திருந்தால்... உயிரும்—பணமும் — மானமும் காப்பாற்றப்பட்டிருக்கும்.

*

அப்பப்பா! மலைபோன்ற அலைகள்! அவைகளையும் எதிர்த்து முன்னேற வேண்டியிருக்கிறது. துடுப்பைச் செலுத்துகிறவர்களைப் பொறுத்துத்தான் வருங்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அவர்கள் நிச்சயம் நம்முடையவர்களாக இருக்க வேண்டும்; இந்தக் கடலின் ஒவ்வொரு இடங்களையும் நன்கு அறிந்தவர்களாயிருக்கவேண்டும். எங்களுடைய இரத்தத்துடனும் தசையுடனும் நம்பிக்கை யுடையவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் எங்களுடைய உயிர்களைச் சூதாடுபவர்களாயிருக்கக் கூடாது!

இந்தப் பச்சிலைக் குன்றுகளில் பல இடங்களிலும் விரோதிகள் ஒளிந்திருக்கிறார்கள், வாய்க்கால்கள் கடலையடையும் இடங்களில் சுழல்கள் ஏற்படுகின்றன! வாழ்க்கையின் இன்ப ஒலியை மீட்டுகிற வீணையின் நரம்புகள் பல இடங்களிலும் அறுந்து போயிருக்கின்றன. பிராணவாயுவில் விஷவாயுக்களும் கலந்திருக்கிறது. பலம் பொருந்திய இக்கோட்டையின் அஸ்திவாரத்தில் அங்கங்கே பழுது ஏற்பட்டிருக்கிறது. ஆட்டங் கொடுக்கும் அஸ்திவாரமு -பாரம் நிறைந்த மேல்பாகமும்! அடிப்பாகத்தில் ஒரு சிறு ஆட்டங் கண்டுவிட்டால் போதும்! முழுவதும் தகர்ந்துவிடும்! பலவற்றையும் நாசமாக்க வேண்டும். பலவற்றையும் நிர்மாணிக்க வேண்டும். வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் மறைந்து நிற்கிற திறமையான தொழிலாளிகளை முன்னுள் விடுங்கள் மேகம் நிறைந்த விண்ணின் கீழ் அவர்கள் மிகவும் வியர்த்து களைத்துப் போயிருக்கிறார்கள்! அந்த உழைப்பின் இரத்தங்களை துடைப்பதற்கு மிகவும் நல்ல விசிறிகளை நீட்டுங்கள், இந்தப் பாரத்தைத் தாங்க அந்த தோள்களுக்கு மட்டுந்தான் சக்தி யிருக்கிறது. கடவுளை நம்பினவர்கள் கைவிடப்படுகிறார்கள். ஆனால் இவர்களை நம்பினவர்கள் கைவிடப்படுவதில்லை. அவர்கள் யாரையாவது வஞ்சித்துவிட்டதாகக் கதைகளில் கூட கிடையாது. பலம் அவர்களுடையது அவர்களுக்கு வழிவிட்டு விலகி நில்லுங்கள். அவர்கள் முன்னால் வரட்டும்.

*

அவர்கள் வராமற் போகமாட்டார்கள், அந்த வசந்தகாலம் வராமற் போகாது. அங்கு மொட்டுகள் தோன்றாமலிரா, அந்த மொட்டுக்கள் விரியாமற் போகாது!

அந்த நன்னாளில் துளிர்த்த சிறு கிளைகளில் ஊஞ்சலாடுகின்ற மந்தமாருதம் இப்படிக் கூறும்—இங்கு இலைகள் வாடி விழ்வதில்லை, இதழ்கள் உதிர்ந்து போவதில்லை. எல்லாப் பூக்களிலும் அழகு ததும்புகிறது! வாழ்வதற்கும் முன்னேறுவதற்கும் உள்ள உரிமை யாராலும் தடுக்கப்படுவதில்லை! எதுவும் எவராலும் அபகரிக்கப்படுவதில்லை.

பூக்கள் இதழ்களை மூடிக் கொண்டது! மின்னுகிற நிலவொளியிலான போர்வையால் கடல் கன்னி தன் மேனியை மூடித் தூக்கத்திலாழ்ந்திருந்தாள்!

ஆட்சி இருளின் கைக்கு மாறியது! வெளிச்சத்தின் பலம் குறைந்து போர்க்களத்தில் காயம்பட்டு அது வீழ்ந்து விட்டது! அடுத்த கட்டம் இருளினுடையதுதான்! இருள் அலைகளை நோக்கிக் கேட்டது — "உங்களுக்கு என்ன வேண்டும்!"

தன்மானம் நிறைந்த அலைகளில் ஒன்று அமைதியாகப் பதில் கூறியது— 'பிரபு, உங்களிடமிருந்தும் எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்! உங்களுடைய திறமைகளைக் குறித்து எங்களுக்குத் தெரியும்! முடிந்தால் ஒன்றைச் செய்யுங்கள்; எங்களுடைய பிரியப்பட்ட சுதந்திரத்தைக் குறித்து கேள்வி கேட்காதீர்கள். சுதந்திரமானது யாராவது ஒருவரின் தயவால் கிடைக்கிறது என்று எங்களை வற்புறுத்தாமலிருங்கள்! சுதந்திரமாக வாழ நாங்கள் தகுதியுடையவர்கள்தான்! எங்களை எங்களுடைய காரியத்தில் விட்டுவிடுங்கள். வணக்கம்,

சுதந்தரமான இந்த நாட்டை ஆள்வதற்கு யார் இருக்கிறார்கள்!—இருளின் கடைசிக் குரல் இப்படிக் கேட்டது, நட்சத்திரங்கள் இமைகளை மூடாமல பார்த்தது. இராக்கிளிகள் கவனித்துக் கேட்டன! மேகங்கள் ஆடாமல் அசையாமல் நின்றன. அமைதியாக இருந்த கடலலைகள் பேரிரைச்சலுடன் வாழ்த்தொலிகளைக்கிளப்பி கரங்களை உயர்த்தி அதோ! அதோ எங்களை ஆளப்போகிறவன் என்று முழங்கியது. பகலவனைக் கண்ட இருள் சிரம் தாழ்த்தினான்!

ஆகாயத்தின் மேனியிலிருந்தும் இரத்தம் கொட்டிக் கொண்டிருக்கிறது. அந்த இரத்தத் துளிகளில் சில பூக்களின் இதழ்களின் மேல் விழுந்தது. இடியின் கொடுமையாலும் மின்னலின் ஆவேசத்தாலும் ஏற்பட்டதாயிருக்க வேண்டும் அந்தக் காயம். இந்தக்காயம் பரவாயில்லை! இரத்தம் ஒழுகுகிற இந்த துன்பத்திற்குப் பின்னர் ஓர் பிரகாசம் இருக்கிறது. பிரகாசம் பொருந்திய நல்ல நிலைமைக்காக காயமும், வேதனையும் இரத்த வெள்ளமும் ஏற்பட்டுக் கொள்ளட்டும், வேதனையின் அடுப்பிலிருந்தாலல்லாமல் இன்பமான நல்லுணவைச் சமைக்க வழியில்லை!

பூக்கள்புதுமணம் பரப்பியது, வாழ்க்கையைத் தொடங்குவதற்கு நிச்சயித்துக் கொண்ட மனிதர்கள் அணிவகுத்து நின்றார்கள். அடக்கப்பட்டவர்கள்—நிராதரவற்றவர்கள் — வியாதியுள்ளவர்கள்—வேசிகள்—பட்டினி கிடப்போர் தெருச்சுற்றிகள்—திருடர்கள்! அவர்கள் வெளியில் கோட்டைக்குச் சமீபமாக வந்து அறிவித்தார்கள். — நாங்கள் பிறந்துவிட்டோம், வாழ்வதற்கு எங்களுக்கும் உரிமையுண்டு! அதிகார பீடத்தைக் குறித்தும் பிரதான சக்தியைக் குறித்தும் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும் வாழ்க்கைக்கு நீர் பாய்ச்சுகின்ற மேகக் கூட்டங்கள் மகிழ்ச்சியால் போர்முழக்கம் செய்தது! ஓர் புதிய சமுதாயம் உருவாகட்டும் என்று பெருங்கடல் அலைகளை யெழுப்பி ஆரவாரம் செய்தது! வாயிற்படிகளில் சென்று பகலவன் மலர்க்கொத்துக்களைத் தட்டி யெழுப்பினான். மத்தியானச் சூரியனின் சாம்ராஜ்யத்தில் பயந்து நடுங்கிப் போயிருந்த காற்று குளிர்ச்சி யடைந்தது! அருவிகள் ராகம் போட்டது.

அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்—சுதந்திரம் இல்லாத இடத்தில் வாழ்க்கையில்லை; வாழ உரிமை யில்லாத இடத்தில் மனிதத் தன்மை வளர்வதில்லை! அங்கே மனிதத்தன்மை நசுக்கப்பட்டு நயவஞ்சகர்கள் கிரீடம் சூடினார்கள்! நாசதாசர்களின் சிறைக் கூடங்களிலிருந்தும் விடுபட்டு நாம் சுதந்திரமடைய வேண்டும்.

சுதந்திர விரும்பிகளின் தெளிவான இந்தக் குரல் கேட்டு திசைகள் திடுக்கிட்டு விழித்தன!

அவர்கள் முன்னேறினார்கள், காடும் மேடும் கடந்து, குழியும் புதரும் கடந்து, தெருவும் ஆறும் கடந்து அவர்கள் முன்னேறினார்கள்! சுதந்திரத்திற்காக முன்னேறி வந்து இரத்தம் சிந்தி உயிர்நீத்த பரிசுத்த பூமியில் அவர்கள் இளைப்பாறினார்கள். அந்த இரத்த பூமியிலிருந்தும் ஓர் வாழ்த்துக் குரல் எழுந்து...

'சுதந்திரத்தின் தீர்த்த யாத்திரைக் காரர்களே, நாங்கள் அபிமானத்துடன் உங்களை வாழ்த்துகிறோம்! வாழ்க்கையின் சகல உரிமைகளுக்காகவும் நாங்கள் புறப்பட்டோம்! காற்று, வெளிச்சம், மழை, நெருப்பு—இவைபோன்று சுதந்திர வேட்கை எங்களுக்கு ஆவேசமும், ஆர்வமும் எழச் செய்தது! ஆனால் எங்களுடைய காலடிகள் இங்கே நின்று போயிற்று! எங்களை நினைவுறுத்துகின்ற எலும்புக்கூடுகள் இதோ இந்த மணற்காட்டுக்குள் புதைந்து கிடக்கின்றன! நின்றுபோன எங்களுடைய இருதயத் துடிப்புகளின் ஓசையை அதோ அந்த அலைகள் ஒலிபரப்புகிறது! நாங்கள் நின்ற இடத்திலிருந்தும் நீங்கள் தொடங்குங்கள். உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.'

அந்தத் தீர்த்த யாத்திரைக்காரர்கள் எல்லோரும் ஏககாலத்தில் இப்படிக் கூறினார்கள்—தியாக பலிபீடத்தில் உயிரைப் பலியிட்ட தீரர்களே ஆவியாகப் போய்விட்ட இரத்தக் கறைகளின் முன்னிலையில் நாங்கள் தலைவணங்குகிறோம்.

நகரத்தின் மத்தியில் பலம் பொருந்திய கோட்டையின் மேல் நின்ற காவற்காரர்களில் ஒருவன் அவர்களிடம் கேட்டான்—அரை நிர்வாணக் கோலங்களாய் காயம்பட்ட உடம்புடன் வந்திருக்கும் நீங்கள் யார்!

மனித இனத்திலிருந்தும் அவமானம் செய்யப்பட்டு வெளியே தள்ளப்பட்ட பிசாசுகள். நீதியில் பங்குபெறுத பிலாத்தோசின் விரோதிகள்! மெக்காவில் நபியிடம் கேள்வி கேட்ட அறியாமையின் விரோதிகள்! மதப்பித்தால் உத்தமனும் காந்தியை சுட்டுப்பொசுக்கிய கோட்சேகும்பலுக்கு சாவுமணி அடிக்க வந்திருக்கும் மகவிரோதிகள், கோகுல் தாயிக்கு முள்கிரீடமும் சிலுவையும் சுமந்து புறப்பட்டிருக்கும் மனித இனத்தின் பிள்ளைகள்,

உங்களுக்கு என்ன வேண்டும்! காவற்காரர்கள் கேட்டார்கள்,

இந்தக் கோட்டைக்கு அப்புறம் உள்ள சமநிலத்துக்கு ஓர் நேர் வழி வெட்ட வேண்டும்!

காவற்காரர்களுக்கு வியப்பேற்பட்டது!

நண்பர்களே—அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்—ஒரே அதிகாரம் நம்மைக் கட்டுப்பத்தி வேறுபடுத்தி யிருக்கிறது; அந்த அதிகாரந்தான் உங்களை மூட்டை சுமக்கிற கழுதைகளாகவும் எங்களை நடைப் பிணங்களாகவும் ஆக்கிவிட்டது. நமக்கிடையே உள்ள கட்டுப்பாட்டை அறுத்தெறிந்து அதிகார பீடத்தை ஒன்றாக எதிர்த்து நிற்க வேண்டும், புறம் தள்ளப்பட்ட நாங்கள் கடைசி போராட்டத்துக்காக வந்திருக்கிறோம்,

அங்கே மூன்று பேர்கள் தோன்றினார்கள். வெள்ளைக் கொடி பிடித்த வைதிகன்! பச்சைக் கொடி பிடித்த முதலாளி! சிவப்புக் கொடிபிடித்த போலித் தொழிலாளர் தலைவன், மூவர்ணதாசர்களும்—கொள்கையற்ற குதர்க்கவாதிகளும்—அவர்களுக்குபக்கபலமாக நின்று கொண்டிருந்தார்கள்! சமாதானம்–சட்டம் அவர்கள் கூறினார்கள்.

மக்கள் இப்படி முழங்கினார்கள், தன்மானத்தை ஒதுக்கிவிட்ட பின்னர் நீங்கள் எங்களுக்கு யாருமில்லாதவர்களாகி விட்டீர்கள். எங்களுடைய சிறு அனுதாபத்துக்குக்கூட இனி நீங்கள் அருகதையற்றவர்கள்! ஏமாற்றுத்தனமான ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகளான நீங்கள் சட்டத்தைப்பற்றி பேசாமலிருங்கள். ஓர் முடிவு கட்டத்தான் நாங்கள் வந்திருக்கிறோம்.

அவர்கள் கோட்டையை கடந்தார்கள். சமநிலத்தில் கூடாரம் அடித்தார்கள். மனிதன் மனிதனை ஏய்க்காதவாழ்க்கையைத் தொடங்கினார்கள். பட்டினியும் பஞ்சமும் இல்லாத நிலையை உறுதிப்படுத்தினார்கள், மனிதத்தன்மை பரிபூரணமடைந்தது.

எங்கள் அன்பின் திருவிடமே! உன் பெருமூச்சுக்கள் நிற்காதோ எனக்கேட்கிறாயா? சற்றுப் பொறுத்துக்கொள். உன் கரங்களில் பிணைக்கப்பட்டிருக்கும் அடிமைத் தளையை அறுத்தெறிய நாங்களும் இதோ ஒன்று சேர்ந்துவிட்டோம்,

(கவிஞர் பொன்குந்நம் வர்க்கியின் ஓர் கட்டுரையொன்றைத் தழுவி எழுதப்பட்டது)

தோழர். அஜாய்கோஷ் அவர்கள்

புதுடெல்லி

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரே, நலம் வேண்டுகிறேன். ஆந்திரத் தேர்தல் முடிவுகள் ஒரு வழியாகத் தீர்ந்து விட்டதால், ஓட்டு எண்ணிக்கையின் துவக்கத்தில் தங்களுக்குக் கண்டிருந்த காய்ச்சல் வேறு வழியின்றி ஓரளவு தானாகவே குறைந்திருக்குமென்று நம்புகிறேன். தேர்தலில் வெற்றி தோல்வி என்பது இயற்கைதான். அதைப் பற்றிக் கவலைப்பட்டு காய்ச்சல் தருவித்துக் கொள்வதில் பயனில்லை.

தோழரே, ஆந்திரத் தேர்தல் குறித்து தாங்களும், தோழர். பி. ராமமூர்த்தியும் சென்ற வாரம் வெவ்வேறு இடங்களில் பேசியிருக்கிறீர்கள். அக்கூட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தோல்வி குறித்து நீங்கள் இருவரும் செய்த விமர்சனத்தைப் படித்ததும் கோமாளிக் கூத்துதான் எனக்கு நினைவிற்கு வந்தது.

தாங்கள், தங்கள் கட்சியின் தோல்வி குறித்து விமர்சனம் செய்கையில் 'ஆந்திரத் தேர்தல் முடிவு கண்டு திடுக்கிட்டேன். எதிர்பாராத வகையில் இப்படி நேர்ந்தது ஏன் என்பது விளங்கவில்லை. தோல்வியைப் பற்றிக்கூட நான் அவ்வளவாகக் கவலைப்படாவிட்டாலும், தேர்தலுக்காக எங்களுக்கு பொருளுதவி புரிந்தவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்களோ, அவர்கள்மனம் என்ன துக்கப்படுமோ என்பதை நினைக்கும்போதுதான் இத் தேர்தல் முடிவைக் கண்டு மிகவும் வருந்துகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

ஆனால் தோழர். ராமமூர்த்தி அவர்கள் பேசுகையில் 'ஆந்திராவில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டு திடுக்கிட்டு விட்டேன். இதன் உண்மை என்னவென்று விளங்கவில்லை. எங்கள் கம்யூனிஸ்ட் கட்சி இவ்வளவு படுதோல்வியா அடையும்? இதன் மர்மம் என்னவென்பது தெரியவில்லையே! ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால், பிரஜா சோஷலிஸ்டுகளை விடவா கம்யூனிஸ்ட் கட்சி மட்டமாகி விட்டது' என்று விமர்சனம் செய்திருக்கிறார்!

சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி என்பார்களே அதுபோல தேர்தலின் தோல்வியைப் பற்றி விமர்சனம் செய்ய முனைந்த தோழர். பி. ராமமூர்த்தியின் கூற்று உங்களின் பேச்சுக்கு நேர் மாருக யிருக்கக் காரணம் என்னவோ? பெரியா தூக்கிலிடப்பட்டபோது அனுப்பி வைத்தீர்களாமே சுற்றறிக்கை அதுபோல இதற்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பவில்லை போலும்!

ஆதலாலேதான் கம்யூனிஸ்ட் கட்சியின் தோல்வியைப் பற்றி உங்களின் அபிப்ராயத்துக்கும், தோழர். ராமமூர்த்தியின் விமர்சனத்துக்கும் இவ்வளவு வேறுபாடு இருக்கிறதென்று கருதுகிறேன்.

ஆக எப்படியோ, பரந்த கண்ணோட்டத்தில் பழுது ஏற்பட்டு விட்டது. எனவே மருத்துவரை அணுகி பரிகாரம் தேடுங்கள்! அதைவிடுத்து மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதைப்போல ஆந்திராவில் உமது கட்சிக்குப் பிடித்துள்ள நோயைப்பற்றி ஆளுக்கொருவிதம் பேசுவதில் பயனில்லை, அன்புள்ள, கூத்தரசன்

ஆச்சாரியார் அவர்கள்

சென்னை.

முன்னாள் முதலமைச்சரே, நலம் வேண்டுகிறேன். தாங்கள் திடீரென அணுகுண்டு தடுப்பு முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு, கடவுள்கள் மிகவும் கவலை கொண்டிருக்கின்றனவாம்! ஏனெனில் தங்களைப்பற்றி பஜிக்க, பூசைசெய்ய, பிரசாதம் படைக்க பாரதநாட்டு மக்கள் மறந்து விட்டதால் கடவுள்களுக்கு பஞ்சமும், பசிப் பிணியும் ஏற்பட்டுள்ளதாகவும். இந்நிலை நீடிக்குமானல், நமது கடவுள்களும் மலாயா, சிங்கப்பூர், இலங்கை முதலிய வெளி நாடுகளைத் தேடி அலைய வேண்டி யிருக்குமென்றும் லோகக் குரு சங்கராச்சாரியாருக்கு அறிமுகமான ஒரு குருவி அறிக்கை விடுத்திருக்கிறது.

ஆச்சாரியாரே நீங்கள் என்னதான் கரடியாகக் கத்தினாலும் வல்லரசுகள் தங்களின் ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ளப் போவதில்லை. எனவே இந்த வீண் வேலையில், அதுவும் உங்களுக்குப் பழக்கமில்லாத அகில உலகப் பிரச்னையில் நுனிப்புல் மேய்வதைப் போல், தலையிடுவதைவிட உங்களுக்கு மிகவும் பழக்கமான பக்திப் பிரச்சார காரியத்திலேயே ஈடுபட்டு வருவீர்களாக. இல்லையெனில் வைதீகம் சாய்ந்து விடுமல்லவா? இந்த ஆபத்து அணுகுண்டு வெடிப்பதைவிட பெரிதாயிற்றே!

அன்புள்ள கூத்தரசன்

●

பெங்களூர் ப. செல்வராசன் மறுப்பு

நான் தி. மு. க. விலிருந்து விலகிவிட்டதாக உள்ளூர் வெளியூர் செய்தித்தாள்களில் வந்துள்ள சேதி ஆதாரமற்றது. எனது ஒப்புதலில்லாமலே பத்திரிகைகள் இதுபோல் புரளியான செய்தியை வெளியிட்டிருப்பது கண்டு வருந்துகிறேன் இப்போதும் நான் தி. மு. க. உறுப்பினன்தானென்றும் இனியும் தி மு க. வின் வளர்ச்சிக்காகவே பணியாற்றுவேன் என்பதையும் உறுதியோடும் ஊக்கத்தோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள ப. செல்வராசன்

கேள்வி? பதில்.

அஞ்சா நெஞ்சன்

கே: அஞ்சா நெஞ்சனே, கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று ஆஸ்தீகர்கள் சொல்கிறார்களே, அப்படி எங்கும் நிறைந்த கடவுளுக்கு கோட்டைபோன்ற கோவில்களைக் கட்டி வைத்திருக்கிறார்களே ஏன்?

—வீர. மகாலிங்கம், கிரேக்மோர், இலங்கை

ப: தோழரே, இதற்குப் பெயர்தான் கண்மூடி வழக்கம் என்பது. இந்தக் கண்மூடி வழக்கங்களைத்தான் மண்மூடிப் போக வேண்டுமென்று ராமலிங்கரும் கூறியிருக்கிறார்.

*

கே: தோழரே, சென்னையில் டிராம் மீண்டும் எப்போது விடுவார்கள்? மறுபடியும் டிராம் வருமா வராதா?

—கோ. கண்ணதாசன், பெங்களூர்

ப: மக்களுக்கு அளித்த வாக்குறுதியை, நம்பிக்கையை நிறைவேற்றும் பண்பு ஆட்சிபீடத்திலுள்ளவர்களுக்கு ஏற்படும் அன்றே டிராம் மட்டுமல்ல, ஆச்சாரியார் ஆட்சியிலே முதன்முதலாக (1938-ம் ஆண்டு) மூடுவிழா செய்யப்பட்ட சென்னை சூளை மில் போன்ற தொழிற்சாலைகளும் திறக்கப்படும்.

*

கே: அஞ்சா நெஞ்சரே, தந்தை வைதீகத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்கிறார். மகன் சீர்திருத்தத் திருமணம்தான் செய்து கொள்வேன் என்கிறார். ஆனல் தந்தை இதற்கு ஒப்புதல் அளிக்க முழு மூச்சாக மறுக்கிறார். இதற்கு என்ன செய்யலாம்?

—கோ. கண்ணதாசன், பெங்களூர்

ப: அந்தத் தந்தையார் மூச்சுத் திணறலிலிருந்து தெளிவு அடையும் வரையில் தற்காலிகமாகத் திருமணத்தை ஒத்திவைப்பது நல்லது.

*

கே: ஆந்திர ராஜ்ய தேர்தலில் கம்யூனிஸ்டுகள் ஏன் தோற்றார்கள்?

—டி. சீனிவாசன், திருப்பதி

ப: கம்யூனிஸ்டுகளின் பரந்த கண்ணோட்டத்தில் ஏதாவது...... ஏற்பட்டிருக்கலாம்.

*

கே: திராவிட கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாகச் சேர வேண்டும் என்று முயற்சி நடக்கிறதாமே அந்த முடிவு எப்படி இருக்கும்?

—டி. ரங்கநாதன், மயிலை

ப: தோழரே, அவசரப்படேல் சற்று பொறுத்திருந்து பாரும்.

*

கே: ராஜாஜியின் பேச்சு முன்புபோல இப்போது எங்கும் இல்லையே ஏன்?

—எம். சரவணன், விழுப்புரம்

ப: ஆச்சாரியாரின் பக்திப் பேச்சுகளைக் கேட்டு கடவுள்களுக்கே காது புளித்துப்போய் விட்டதாக வதந்தி.

*

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, தி. மு. கழகம் பிரச்சாரமும்—போராட்டமும் நடத்துவதோடு, தேர்தலில் போட்டி போடவேண்டும் என்பது எனது யோசனை. என்ன சொல்லுகிறீர்.

—எஸ். நெடுமாறன், குடந்தை

ப: தோழரே, உம்மைப்போன்றவர்களின் யோசனையை சமயம் நேரும்போது தி. மு. கழகம் கவனிக்கும்.

*

கே: காங்கிரஸ்காரர்கள் சோஷலிஸம் மாதிரி பொருளாதார அமைப்பை எப்போது கொண்டு வருவார்கள்?

—எம். சின்னத்துரை, குடந்தை

ப: ஏழை—நடுத்தர மக்கள் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்பு ரயில்வே கட்டணத்தை உயர்த்தி யிருக்கிறார்களே தெரியவில்லையா? நேரு சர்க்காரின் "சோஷலிஸம் மாதிரி" பொருளாதார அமைப்பின் (Sample) மாடல் இதுதான் தோழரே.

*

கே: காமராசர் ஆஸ்திகரா—நாஸ்திகரா? —கா. பழனிவேலு, வடசென்னை

ப: அதைப்பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியாது. ஆனல் காமராசர் போலி ஆஸ்திகர்அல்ல என்பது மட்டும் அவரது நடவடிக்கைகளிலிருந்து தெரிகிறது.

பம்பாயில்

சொற்பயிற்சிக் கூட்ட ஆரம்பவிழா

நாள் ... 13—3—55
இடம் ... குடியரசு நிலையம்
நேரம் ... மாலை 5 மணி

தலைவர்: எஸ். வள்ளிநாயகம்

பேச்சாளர்கள்

எஸ். தியாகராசன்
சி. த. மு. இர. ஆரியசங்காரன்
எஸ். எம். சுப்பையா
ம. இரா. குறள்தாசன்

அன்பன்

இரா. மா. சண்முகராசன்

செயலாளன்

சரோசா—இராசவேலன்

4—3—55 காலை குடியேற்றம் கன்னிகாபுரத்தில் தோழர் இராசவேலனுக்கும் தோழியர் சரோஜா அம்மையாருக்கும் திருந்திய திருமணம் தோழர் ராமலிங்கம் (அய்யர்) தலைமையில் சிறப்புற நடைபெற்றது. மணமக்களை பாராட்டி தோழர்கள் செ. ம. அரங்கசாமி, பா. துரையரசு, பி. ஜி. ராசன் ஆகியோர் பேசினர். இதன் நினைவாக குடியேற்றம் நகர தி. மு. கழகத்திற்கு ரூபாய் ஒன்றும் திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்றும் மணமக்களால் அளிக்கப்பட்டது. திராவிடன் அன்பளிப்பை வரப் பெற்றோம், நன்றி—நிர்வாகி.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

5

தொல்காப்பியத்திற்கு காணப்பட்டுள்ள உரைகளும் நூல்களும் பிற்கால இலக்கணங்களும் உயர்ந்தோர் மேலோர் கீழோர் என்பனவற்றிற்கு விளக்கவுரையும் விரிவுரையும் எழுதியுள்ளன. இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய நால்வருரைகளும் சிறப்பாகக் கூறப்படுகின்றன தமிழறிஞர்களால். இறையனார் களவியல், நாற்கவிளம்பி அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம், வீரசோழியம் முதலிய உரையுடன் கூடிய இலக்கணங்களும் உயர்ந்தோர் மேலோர் கீழோர் பற்றிய விவரங்களைக்கூறியுள்ளன. உயர்ந்தோர் மேலோர் என்பார் அந்தணர் அரசர் வைசியர் (வணிகர்) வேளாளர், உழுதுவித்துண்ணும் வேளாளர் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது நச்சினார்க்கினியரால். மற்ற உரையாசிரியர்களும் ஆரிய வருணத்தாரான அந்தணர் அரசர் வணிகர் சூத்திரர் என்றே பொருள் கொள்ளுகின்றனர். இவர் ஒழுக்கத்தானும் குணத்தானும் செல்வத்தானும் ஏனையோரினும்உயர்புடையாதலின் உயர்ந்தோர் என்றார் என்று கூறினும் நான்கு வருணத்தினும் உயர்ந்த அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவு என்று கூறுவர் இளம்பூரணர்,

கீழோர் என்ற சொல்லுக்கு தமிழ் கூறு நல்லுலகத்தினரென்று தொல்காப்பியர் கூறும் ஐவகை நிலத்திற்கு முரியவரான குறவர் ஆயர் மறவர் கிழார் பரதவர் ஆகியோர் என்று விரிவுரை கூறியுள்ளனர். தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி எனும் மு. ராகவய்யங்கார் கூறுவதும் இவண் எடுத்துக்காட்டுவது அவசியமாகும். இவரது கூற்றுக்கள் யாவும் எளிதில் மறுத்துக் கூறப்படக்கூடியன வாகும். அவ்வாறே அறிஞரேறு திரு.பா.வே ,மாணிக்கநாயக்கர் அவர்களால் மறுத்துக் கூறப்பட்டுள்ளது. அறிஞர் மாணிக்க நாயகர் அவர்களது ஆராய்ச்சி வழியில் தொல்காப்பியம் ஆராய்ச்சி செய்யப்பட்டால் புதுமையானபொருள்களும் உண்மையான பொருள்களும் கண்டுபிடிக்கப் படலாம். அவர் காரியத்தைத் தொடர்ந்து செய்யக் கூடிய திராவிடர் யாருளர்? இப்பொழுதுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர்களில் பெரும்பாலோர் ஆரியக் குட்டையில் மூழ்கி எழுபவராகவே உள்ளனர்!

மேலோர் மூவர்க்கும்புணர்த்த கரணம் கீழோர்க்காகிய காலமுமுண்டே என்னும் கற்பியல் சூத்திரத்தில் கண்ட கீழோர் என்ற சொல் ஐவகை நிலத்துக்குரிய பண்டைத் தமிழ் மக்களையே பெரும்பான்மை உணர்த்துவதாம்

என்னை? களவியற்குப்பின் கற்பியலை வைத்து ஆசிரியர் விதித்துப் போந்தனவெல்லாம் வடவேங்கடத் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கேயன்றிப் பிறநாட்டு வழக்கு ஆகாமையால் என்க. முன்னியல்களிற் களவுக் கூட்டத்திற்குரியர் என கூறப்பட்ட தமிழர்க்கு ஆரியரது கரணவிதியைக் கூறியதன் காரணமென்னை? என்ற ஆசங்கையைப் பரிகரித்தற்கே இச்சூத்திரங்கள் கற்பியலின் தொடக்கத்தே ஆசிரியராற்கூறப்பட்டன என்பது உணரத்தக்கது என்று கூறி அதற்கு ஒரு அடிக் குறிப்பும் கொடுத்துள்ளதாவது: 'நாற்கவி ராச நம்பியாரும் மொழிந்தோர் நால்வரு மொழிந்தந்நிலத்துறை இழிந்தோர் தம்முளு முயர்ந்தோரு மெய்துப (31), இழிந்தோர் தமக்கு மிவற்றுண் மேம்பட்டவை யொழிந்தன வாமென மொழிந்தனர் புலவர் (76), என்ற சூத்திரங்களினும் அவற்றினுரையினும் நால்வகை வருணத்தவரை உயர்ந்தோர் என்றும் ஐந்திணை நில மக்களை இழிந்தோர் என்றும் கூறினர். ஆரிய வருண பாகுபாட்டுள் இவ்வைந்திணை மக்கள் அடங்காமைபற்றி இவ்வாறு அவர்கள் கருதப்பட்டனர் போலும் என்று கூறியுள்ளார்.

பிரிதோரிடத்தில் உலக வழக்கு பற்றி கூறுமிடத்தில் திரு, அய்யங்கார் கூறுவதும் இங்கு கூறவேண்டியதாகும். "......ஆகவே தமிழ் நாட்டில், காந்தருவம் போன்ற ஒழுங்கான களவுமுறையன்றி ஒழுங்கற்ற களவு முறையாகிய இராக்கதம் போன்றனவும் முற்காலத்து வழங்கலாயின. என்பது உய்த்துரைத் தக்கதாம். 'மையின் மதியின் விளங்கு முகத்தானை வெளவிக் கொளலு மறனெனக் காண்டன்று' என்றும் குறிஞ்சிக் கலியடிகளும் இக்கருத்தே வலியுறுத்தல் காணலாம் (62) இப்போது ஒழுங்கற்ற மண முறைகளை விலக்கி ஒத்த அன்பு பற்றிய காந்தருவத்தையும், அதன் பின்னர்க் கற்பியலையும் ஆரிய மேலோர் தமிழ் நாட்டார்க்கு நன்கு விதித்துப் போந்தனரெனவும், இங்ஙனம் விதிக்கப்பட்ட களவுங் கற்புமே இத்தொல்காப்பியத்துங் கூறப்பட்டன எனவும் உணர்ந்துகொள்க' எனக் கூறுவதும்,

களவுக் கூட்டத்தின் நிகழ்வது கற்பு முறையாகும். ஆனல் களவொழுக்கமின்றியே தனிக் கற்பு முறை முன்பு வழங்கியதில்லையென்பது, 'முற்படப் புணராத சொல்லின் மையிற்—கற்பெனப் படுவது களவின் விழித்தே' (இறைய—களவி) என முன்னோற் மொழிதவாற்றெரிய வருகின்றது. இக் கற்பிலே தலைவியின் பெற்றோர் கொடுப்பக் கொள்வதேயன்றி, ஒருவருமறியாமல் தலைவன் அவளை உடன் கொண்டுபோன விடத்துக் கொடுப்போரின்றியும் சடங்கின் வழியால் அவளை அவன் மணப்பது உண்டென்பர் தொல்காப்பியனார். இக்கற்பு முறை ஆரிய வருணத்தார் மூவர்க்குமே இருடிகளால் ஆதியில் நியமிக்கப் பட்டதென்றும், அவ்விதிகளைத் தங்கள் புராதன முறையொன்றில் நின்றொழுகிவந்த தமிழர் முதலியோரும், பிற்காலத்தே அவர்கள் விதித்துப் போந்தனரென்றும், ஆசிரியரே கூறுகின்றார். இதனை மேலோர் 'மூவர்க்கும் புணர்த்த காரணம் கீழோர்க்காகிய காலமும் உண்டே என்ற கற்பியல் சூத்திரத்தால் (3) அறிக. இதனால் ஆரியரது கற்பியல் விதிகளைத் தமிழர் அறிந்திராத காலமும் ஒன்றிருந்ததென்பது வெளியாம், பிற்காலத்தே ரிஷிகள் கற்பு முறையைத் தமிழர்க்கு விதித்ததன் காரணம் அவரது களவியன் முறையில் பொய்யும் வழுவும் தோன்றிச் சீர்கெட்டதேயாம் என்பது முன்பும் விளக்கப்பட்டது. என்று கூறியுள்ளார்.

இவைகளை யெல்லாம் கூறியவாற்றால் உரையாசிரியர்களும் தற்கால ஆராய்ச்சியாளர்களும் உயர்ந்தோர் என்பார் ஆரிய வருண பாகுபாட்டின்படி அமைந்த அந்தணர் அசசர், வேளாளர், என்று சொல்லப்பட்டனர் என்பதும், கீழோர் இழிந்தோர் எனப்பட்டோர் ஐந்திணை மக்களான தமிழ் மக்கள் யாவரும் என்று சொல்லப்பட்டனர் என்பதும் தெரியவரும்.

உயர்ந்தோர் — தாழ்ந்தோர், இழிந்தோர்—மேலோர்--கீழோர் என்றெல்லாம் சாதி பாகுபாடுகள் ஏற்பட்டது மருதநில மக்களான வேளாளர்களினுல்தான் என்பதும், அந்தணர் என்போர் கல்வியானும், நாகரீகத்தானும், கடவுள் வழிபாட்டானும் மேம்பட்ட அந்தண வேளாளரேயாகும் என்பதும், வேளாளர்களுள் அரசர் குறுநில மன்னர், அமைச்சர், படைத் தலைவர்களாக இருந்தோரும் இவர்கட்கு உறவினராய் உழவுத் தொழிலை நடப்பித்து செல்வராய் வாழ்ந்த எல்லாரும் அரச மரபினராயினர் என்பதும், உழவுத் தொழிலாற் பெற்ற பல பண்டங்களையும் ஓரிடத்திற் றிருகுத்துப் பலரும் எளிதிற் பெறுமாறு விற்று வாணிகம் நடாத்தினோரே வேளாளருள் வணிகராயினர் என்பதும், உழுதுண் வேளாளரும் குற்றேவல் செய்வாரும் பல கைத்தொழில் புரியும் கைக்கோளார் தச்சர், கொல்லர், கம்மாளர், தட்டார், கன்னார், செக்கார், மருத்துவர், குயவர், வண்ணார், துன்னர், ஓவியர், கூத்தர், நாவிதர் சங்கறுப்பார், பாகர், பறையர் ஆகிய பதினென்மரும் மேற்காட்டிய மூவகையினரைப்போற் செல்வராய் இல்லாமையினாலும் நாள் முழுதுந் தொழில்கள் பல இயற்றுதலாற் கல்விகற்க ஓழிவு நேரம் பெறாமையினாலும் மற்ற புலால் உண்ணும் முதலிய காரணங்களினாலும் கடைப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தமையினால் கீழோர் ஆயினர் எனக் கூறுவார்.

மறைமலையடிகளார் தம் "**சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்**" எனும் நூலில் தொல்காப்பிய பாக்களை எடுத்து விளக்கிச்சொல்லும் **அடிகளார்** சாதி சழக்குகளை சாடியும், தற்கால வேளாளர்களுக்கு சவுக்கடி கொடுத்தும் சாதி என்பது நீர் வாழ்வனவும் பறப்பனவும் ஊர்வனவுமானஐயறிவு உயிர்களை பிரிவு படுத்திக் காட்டுதற்கே தொல்காப்பியரால் ஆளப்பட்டுள்ளது என எடுத்துக் காட்டியும் (**நீர்வாழ் சாதியுள் அறு பிறப்பு உரிய**—தொல் மரபு 42) ஆகவே சாதிசாதி என்று பார்ப்பரினும் கொடுமையாக கொக்கரிக்கும் வெள்ளாழர்எனும் வேளாள வகுப்பினரை இழித்துரைத்தும் போந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்படியெல்லாம் விளக்கம் கூறினுல் கூட தொல்காப்பியர் காலத்து கீழோர் இருந்தனர் இழிந்தோர் இருந்தனர், அடிமைகள் இருந்தனர் என்னும் உண்மைகளை உடன்பட்டும் இக்கீழோரும் இழிந்தோரும் அடிமையரும் ஐந்திணை மக்களான மறவர், குறவா, பரதவர், கிழார், ஆயர் (வேளாளரைத் தவிர்த்த) என்பவரே ஆவர் என்பதை ஏற்றும் இப்படிக் கூறப்பட்ட கீழ் மக்கள் யாவரும் ஓதும் உரிமை அதாவது கல்வி உரிமை அற்ற குருடர்களாகவே வாழவைக்கப்பட்டனர் என தொல்காப்பியர் விதி கூறுவதை ஆதரித்தும் இவ்வாராய்ச்சியாளர்கள் விளக்கம் கூறியுள்ளது தெரியவரும். தெரியவே தொல்காப்பியர் காலத்தும் சமுதாயத்தில் கீழ்நிலையில்இருந்த பெரும்பாலான மக்கள் கல்வி உரிமை அற்றவர்களாகவே வாழ்ந்துவர சூழ்ச்சி செய்யப்பட்டிருந்ததென்பது விளங்கும்.

இக்காலத்தில் தலைவன் தலைவியானோர் இருவரும்உடன் சேர்ந்து கடல் கடந்து மேல்நாடுகட்குச் சென்று மேல் நாட்டுக் கல்விகளை பயின்று வருவது வழக்கமாயுள்ளது. இதுமட்டுமன்று, தலைவனிருக்க தலைவியானவள் தனித்தே கடல் கடந்து மேல்படிப்பிற்காக சென்று வருவதும் வழக்கமாயுள்ளது. ஆனுல் பண்டைக் காலத்திலோ ஓதற்காக (கல்வி பயில்வதற்காக) தலைவனானவன் தலைவியை உடன்கொண்டு செல்லுதல் கூடாதென்ற வழக்கம் இருந்து வந்தது. கடல் கடந்து செல்வது பெண்களுடன் இல்லை என்ற வழக்கம் நிலைத்திருந்ததினுல் பெண்களுடன் சென்று கல்வி கற்பதோ அல்லது பெண்களே தனித்து கடல் கடந்து சென்று கல்வி கற்பதோ பழக்கத்தில் இல்லாதிருந்தது. இவ்வுண்மை "**முந்நீர் வழக்கம் மகடூட வோடில்லை**" என்ற சூத்திரத்தினின்றும் தெரியவரும். இச்சூத்திரத்தின் பொருளாவது "ஓதலுந் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையாற் செல்லுஞ் செலவு தலைவியோடு கூடச் சேரலின்று என்றவாறு என்பதாம்.

மேற்கூறிய தொல்காப்பிய கால கல்வியைப் பற்றி திரு மு. ராகவைய்யங்கர் தமது தொல்காப்பிய பொருளதிகர ஆராய்ச்சி நூலின் கண் கூறுவதை இவண் எடுத்துக்காட்டுவதும் வாசகர்களின் சிந்தனையை கிளறிவிடக் கூடியதாகும்.

—(தொடரும்)

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

6

ஆதிக்க வெறியர்கள் செய்யும் முதல் சூழ்ச்சி, தங்களுடைய தாய்மொழியை ஆதிக்க மொழியாகத் திணிப்பதுதான் என்று, ஏற்கனவே கூறியுள்ளோம். அவ்வாறு திணிக்கப்படும் மொழி, எவ்வளவு கேடு செய்யும் என்பதை, திரு. லாலா லசபதிராய் அவர்களுடைய "துரதிருஷ்ட இந்தியா" என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

திரு. **லாலா லசபதிராய்** அவர்கள், காங்கிரசின் மேல் வரிசையில் வைத்துப் போற்றப் படுபவர். அதாவது, திரு. காந்தியார், திரு. சவகர்லால் நேரு, திரு. இராசேந்திரபிரசாத் போன்ற பெருந் தலைவர்கள் வரிசையைச் சேர்ந்தவர். அவர் எழுதிய துரதிருஷ்ட இந்தியா என்னும் நூல், அக்காலத்தில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஏராளமாக விற்பனையாயிற்று. அதற்குக் காரணம் என்னவெனில்: அமெரிக்காவிலிருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்த, மிஸ். மேயோ என்பவர், தனது சுற்றுப் பிரயாண முடிவில், ஆங்காங்கு நேரில் கண்டு கேட்ட செய்திகளைத் தொகுத்து 'இந்திய மாதா' என்கிற பெயரால் ஒரு நூல் வெளியிட்டார். அதில், இந்தியாவின்பெரும் பாலான இழிதகைமைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்ட இந்தியத் தலைவர்கள், அந்த நூலுக்கு மறுப்பு நூலாகப் பலவற்றை எழுதினார்கள். அந்த மறுப்புகளில் ஒன்றுதான் துரதிருஷ்ட இந்தியா!

"இந்தியர்கள் கல்வியறிவிலும், நாகரீகத்திலும், மிகமிகப் பின்தங்கி இருக்கிறார்கள். அடிமைப் புத்தியும், சுயநலமும் தாண்டவமாடுகின்றன" என்று இந்திய மாதாவில் மிஸ்.மேயோ கூறியதை மறுத்து, ஆங்கில ஆதிக்கமும், ஆங்கிலேயர் ஆட்சியும் தான் இந்தியர்களைக் கல்வியறிவற்றவர்களாக்கிவிட்டன என்று விவரிக்கப் புகுந்த திரு. லசபதி அவர்கள் "பயனற்ற படிப்பு" என்னும் தலைப்பின் கீழ் குறிப்பிட்டவைகளைக் கீழே தருகிறோம்.

"......முன் அத்தியாயத்தில் எடுத்தாண்டிருக்கிற மேற்கோள்களினால், பிரிட்டிஷார் வருவதற்கு முன் இந்தியாவில் கல்வித் திட்டமே இல்லாதிருந்ததென்றும், இப்பொழுதும் கல்வி பரவுவதற்கு இந்தியர்கள் விரோதிகளாகவே இருந்து வருகிறார்களென்றும். கன்னி மேயா கூறுவது முழுதும் பொய் யென்று நன்கு ருசுவாகும்.

பிரிட்டிஷ் அரசாட்சி நிலைபெற்று 175 ஆண்டுகள் சென்ற இக்காலத்துக் காணப் படுவதைவிட, பிரிட்டிஷார் வருமுன், அநேக மாகாணங்களில், மிகுதியாகவே கல்வி பரவி இருந்தது இந்தியர்களின் பழைய கல்வித் திட்டம், இந்திய மக்களின் வாசனைக்கும், தேவைக்கும், பொருத்தமானதாக இருந்தது ஒரு நோக்கமும் இன்றி பிரிட்டிஷார், பழைய கல்விமுறையைத் தொலைத்துவிடவுமில்லை. வேண்டுமென்றே அவர்கள் நமது கிராமப் பள்ளிக்கூடங்களை நாசம் செய்தார்கள். இந்திய சர்க்கார் கல்வித் திட்டத்தின் அந்தரங்கத்தை அறிய வேண்டுமானால் அந்தத் திட்டத்தை உறுப்படுத்திய அதிகாரிகளின் மனப்பான்மையையும், 18-வது நூற்றாண்டு சம்பவங்களின் போக்கையும் நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

18-வது நூற்றாண்டின் இறுதியில் திரு. **சார்லஸ் கிராண்டு** என்பார் இந்தியர் கல்வி விஷயமாக வெளியிட்டுள்ள ஒரு நூலில் அவர் கூறியிருப்பதாவது:

"நாம் அமுலில் கொண்டுவரும் புதிய கல்வித் திட்டத்தின் வெற்றியில்தான் நமது க்ஷேமம் அடங்கி இருக்கிறது. இந்தியாவின் உள்நாட்டுக் கலகங்களை அடக்கவும், நம்மிடம் இந்துக்களுக்கு பரிவு உண்டாகவும், நமது உடைமைகளையும். தேசங்களையும், பாதுகாக்கவும், மிகவும் தகுதியான ஏற்பாடுகளை நாம் செய்தல் வேண்டும்"

லார்டு மெக்காலேயின் பந்துவும், கம்பெனி (ஈஸ்டு இந்தியா கம்பெனி)யில் பல உத்தியோகங்கள் வகித்தவரும், பின்னர் சென்னைக் கவர்னர் ஆனவரும், இந்திய சுப்ரீம் கௌன்சில் மெம்பராயிருந்தவருமான சர். சார்லஸ் டிரிவேலியன், சுமார் 40 வருடங்களுக்குப் பின், இந்தியர் கல்வியைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டார். இந்தியர் கல்விக்காக பத்து லட்சம் பவுன் வருடந்தோறும் செலவு செய்தால், இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கி நேச பாவனையில் இருப்பார்கள் என்று, அவர் அந்நூலில் முடிவு கூறியிருக்கிறார். அவர் கூறுவதாவது:

> **வாசகர்களுக்கு**
>
> ○
>
> இவ்வாரம், தோழர் எம். எஸ். ராமசாமி அவர்கள் இக்கட்டுரையில், மொழி ஆதிக்கங்களைக் குறித்து லாலா லசபதிராய் போன்ற தேசியத் தலைவர்கள் கூறியதையே எடுத்துக் காட்டி விளக்கம் கூறுகிறார், இதனை வாசகர்கள் கூர்ந்து கவனித்து கருத்தில் கொள்ள வேண்டுகிறோம்.
>
> (ஆ—ர்)

"நாம் பின்பற்றப்போகும் முறை (ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக்கும் முறை) புதியதல்ல.

உரோமர்கள், தங்களது இலக்கியங்களையும் கலைகளையும், ஐரோப்பியர்களுக்குக் கற்பித்து, உரோம நாகரீகத்தை ஐரோப்பா முழுவதும் உரோம மயம் ஆக்கியதனால், ஐரோப்பா முழுவதும் உரோமாபுரிக்கு அடிமையாயிற்று. யுத்த மூலம் பெற்ற வெற்றியை, அவர்கள், தமது கல்வி முறையால் வலுப்படுத்திக் கொண்டார்கள்.

இத்தாலி, ஸ்பெயின், ஆப்பிரிக்கா, கால் முதலிய தேசங்கள், முன்னேற்ற உணர்ச்சி ஏதுவுமின்றி, உரோம நாகரீகத்தை குருட்டு நம்பிக்கையுடன் பின்பற்றி, கடைசி வரை உரோம சாம்ராஜ்யத்திற்கு அடிமைகளாகவே இருந்தன.

இறுதியில், அந்நாடுகள் உரோமர் பிடிப்பிலிருந்து விடுபட்டது உள்நாட்டுப் புரட்சியால் அல்ல! வெளிநாட்டு அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே அவை பிரிய நேரிட்டது.

நாம் ஒரு காலத்தில், உரோமர்களுக்கு எவ்வாறு கீழடங்கி இருந்தோமோ, அவ்வாறே இந்தியர்களும், நமக்கு கீழடங்கிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

பிரிட்டிஷ் தலைவர்களின் மக்களுக்கு உரோமக் கலைகளையும். இலக்கியங்களையும், சாஸ்திரங்களையும் போதித்து, உரோம நாகரீகத்தில் சுவையூட்டுவது, ஜூலியஸ் ஆக்ரிகோலாவின் வழக்கமாய் இருந்ததென்று டாசிட்டஸ் என்னும் ஆசிரியர் கூறுகிறார். அவரது யுக்தி சரியாகப் பலித்ததென்று, நாம் அனைவரும் அறிவோம்.

பிரிட்டிஷார், உரோமர்களுக்குச் சத்துருவாய் இராமல் நம்பிக்கையுள்ள நேயர்கள் ஆனார்கள்.

உரோமர் ஆக்கிரமிப்பைத் தடுக்க அவர்களது முன்னோர்கள் எவ்வளவு முயன்றார்களோ, அவ்வளவுக்கு உரோம நாகரீகத்தைப் பின்பற்ற இவர்கள் முயன்றார்கள்.

வங்காளத்தில் ஆங்கிலக் கல்வியைப் பரப்பிய ரெவரண்டு அலக்சாண்டர் டப் என்பாரும், இந்த உரோம — பிரிட்டிஷ் வரலாற்றை வற்புறுத்திக் கூறி யிருக்கிறார். சர். டிரிவேலியன் நூல் வெளிவந்த அதே காலத்தில் ரெவரண்டு அலக்சாண்டர் டப் வெளியிட்ட ஒரு புத்தகத்தில், அவர் எழுதி இருப்பதாவது:

"உரோமர்கள் ஒரு மாகாணத்தைப் பிடித்தடக்கிய உடனே, அதை, உரோம மயமாக்க முயற்சி செய்தனர். அதாவது, உரோம இலக்கியம், கலை, சாஸ்திரம், வீரப் பாடல்கள் இவைகளால், தாம் அடக்கிய தேசத்தாருக்குச் சுவையூட்டினர். உரோமர்கள், தமது முயற்சியில் வெற்றி பெறவில்லையா?

சுதேசக் கல்வி முறை, பிரிட்டிஷார் க்ஷேமத்திற்கு ஆபத்து விளைவிக்கும் என்று சர். டிரிவேலியன் நினைத்தார். ஆகவே, இந்தியச் சிறுவர்கள் ஆங்கிலக் கல்வியிலும், ஆங்கில நாகரீகத்திலும் மூழ்கி, ஆங்கில மயமாக வேண்டும், என்று அவர் விரும்பினார்.

மேலே கூறியவற்றுள் அடங்கிய அரசியல் சூழ்ச்சியை, இதைவிடத் தெளிவாக நமக்கு விளக்க முடியாது.

இனி, சர். டிரிவேலியனின் பந்துவான லார்டு மெக்காலே கூறுவதைக் கவனியுங்கள்.

"நமக்கும், நாம் ஆளும் கோடிக் கணக்கான இந்திய மக்களுக்கும் இடையே, ஒரு வகைத் தரகரைச் சிருஷ்டி செய்ய நாம் இப்பொழுதே முயலவேண்டும்.

பிறப்பினாலும், நிறத்தினாலும், அவர்கள் ஆங்கிலேயர்களாகவே இருந்தாலும் இலக்கிய வாசனையிலும் ஆசார அனுஷ்டானங்களிலும், அவர்கள் ஆங்கிலேயர்களாகவே இருத்தல் வேண்டும்"

மேலே கூறிய திருஷ்டாந்தங்களால், பிரிட்டிஷார் ஆங்கிலக் கல்வியை இந்தியாவில் பரப்பும் நோக்கம், என்னவென்பது விளங்கவில்லையா? அரசியல் காரணங்களை முன்னிட்டே, நடைமுறைக் கல்விக்கு அவர்கள் விரோதிகளாய் இருக்கிறார்கள். இந்தியாவில் புகுத்திய புதுமுறைக்கல்வி, இந்தியர்களின் செல்வ வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும், உதவியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணவில்லை.

அவர்களது அரசியல் நிருவாகம் சுகமாய் நடைபெறுவதற்காகவே. அக்கல்வியை அவர்கள் நடப்பாக்கினார்கள்.

1828-ல் பம்பாய் கவர்னர், **சர். ஜான் மால்காம்** வெளியிட்ட ஒரு யாதாஸ்தில், அவர் கூறி இருப்பதாவது:-

"இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டுவதன் முக்கியமான நோக்கம், நமது அரசியல் நிருவாகத்தில் அவர்களை ஜாஸ்தியாகப் பழக்குவிப்பதேயாகும். செலவுச் சுருக்கத்தையும், அபிவிருத்தியையும், நமது நலனையும் கவனித்தால், இம்முறைமிகவும் முக்கியமானதென்றே தோன்றும்.

ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறித்து, அரசாங்கச் செலவைக் குறைப்பதை, நான் சம்மதிக்க முடியாது. குறைந்த சம்பளத்தில், சுதேசிகளை

உத்தியோகத்தில் நியமனம் செய்து அரசாங்கச் செலவைக் குறைப்பதை, நான் ஆதரிக்கிறேன்”

மேலே கண்ட வாசகங்கள் அத்தனையும் திரு. லாலா லஜபதிராய் அவர்களுடையனவாகும்.

ஆதிக்க வெறியர்கள், எவ்வளவு முன்யோசனையோடு தங்களுடைய 'தாய் மொழியை ஆதிக்க மொழியாகத் திணிக்கிறார்கள் என்பதை, ஆங்கிலேயர்களின் அரசியல் நூல்களில் இருந்தும், சர்க்கார் தஸ்தாவேசுகளிலிருந்தும், எடுத்துக் காட்டுகிறார் லஜபதி. அவரே மேலும் சொல்கிறார்:-

'உத்தியோகம் கொடு, அல்லது உயிரை மாய்த்துவிடு' என்னும் 'மனப்போக்குடையவர்களைச் சிருஷ்டிப்பதே பிரிட்டிஷ் அதிகாரிகளின் நோக்கம். இதற்காக, அவர்கள் நிர்மாணம் செய்த கல்வி யந்திரம் மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கிறது'

இப்படியே அங்கலாய்த்துக் கொண்டு போகிற திரு. லஜபதி அவர்கள், கடைசியாக இந்தியாவின் கைத்தொழில்கள் அழிக்கப்பட்ட விதங்களைக் கூறி, அவ்வாறு தொழில்கள் அழிந்த காரணத்தால்; எல்லாரும் சர்க்கார் உத்தியோகத்திற்கே மனுச் செய்யும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகக் கூறி, பயனற்ற படிப்பு, என்னும் தலைப்புள்ள அத்தியாயத்தை முடிக்கிறார்கள்.

ஆங்கிலேயர்கள் எவ்வாறு தங்களுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்தத் தகுந்த கல்விமுறை ஏற்படுத்தினார்களோ, அது போலவே, வடவர் ஏகாதிபத்திய வாதிகளும் புதிய கல்விமுறை ஏற்பட வேண்டும் என்று, வாய்கூசாமல் பேசுகிறார்கள்.

கடந்த 21-1-55-ல் ஆவடியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில், தலைமையுரை நிகழ்த்தியபோது திரு. உச்சரங்கராய் நவல் சங்கர் தேபார் கூறியது இங்கு ஆராயத் தக்கது.

'இன வேறுபாடுகளால் இணைக்கப்பட்டுள்ள நாட்டின் கொள்கைகளுக்கு இடையூறு விளைகின்றது என்பதை, நாம் நன்கு அறிந்திருக்கிறோம்,

நாம் கருத்தில் கொண்டுள்ள புதிய சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை' தான் இந்தியாவில் இருக்கவேண்டும்,

என்று கூறியிருக்கிறார் திரு. தேபார். இந்தியாவிலுள்ள பல்வேறு தேசீய இனங்களின் இன உணர்ச்சிகளையும், தேசீய அபிலாஷைகளையும் ஒடுக்கி, போலி ஒற்றுமை உண்டாக்குவதற்கு புதிய கல்வி முறை இருக்க வேண்டும். அந்தப் புதிய கல்வி முறையை நாம் ஏற்கனவே கருத்தில் கொண்டிருக்கிறோம் என்கிறார் திரு. தேபார்!

அவருடைய பிரசங்கத்தில் ஒரு ஏகாதிபத்திய அரசியல் பண்பும், அது நிலைபடச் செய்ய வேண்டிய வழிவகைகளும், மிகவும் திட்ப நுட்பமாகச் செறிந்திருப்பதைக் காணலாம்.

சர். டிரிவேலியன், லார்டு மெக்காலே போன்றவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலைபடுவதற்கு என்ன வழி சொன்னார்களோ, அதே வழிகளை திரு. தேபார் சாதுரியமாகக் கூறி இருப்பது கவனிக்கத்தக்கது.

திரு, தேபாரின் வாசகங்கள் பிரிட்டிஷாரின் இராஜதந்திர வாசகங்களைவிட சாதுரியமாக-ஆழ்ந்த பொருளுடன் அமைதியாக விளங்குகின்றன. இதிலிருந்து, வடவர்கள் இராஜதந்திரப் பேச்சுக்களில், பிரிட்டிஷாரையும் மிஞ்சி விட்டார்கள், என்பது தெளிவாகிறது.

இத்தகைய, அரசியல் சூழ்ச்சிகளை எல்லாம் நன்கு பயின்றிருக்கிற காரணத்தினால் தான், வடஇந்தியத் தலைவர்கள், அவர்களுடைய நேர் பிரதிநிதியான திரு. இராசகோபாலாச்சாரி மூலமாக 1938 லேயே திராவிடத்தில் இந்தியை நுழைத்தார்கள் போலும்!

இதுவரை ஒரு மொழி ஆட்சி மொழியாக எதனால் உயர்த்தப்படுகிறது; அதனால் இதர மொழியாளர்கள் என்ன நிலைமை அடைகிறார்கள் என்பதை விவரித்தோம்,

இனி, ஏகாதிபத்திய மொழியாளர்கள் மற்ற மொழியாளர்களை எப்படி நடத்துகிறார்கள் என்று ஆராய்வோம், ஒவ்வொரு மொழிக்காரனும் தன்னுடைய மொழிதான் உயர்ந்தது என்று கருதுவது இயற்கை. அரசியல் நிருவாக முனையில் அமரும் வாய்ப்புக் கிடைத்தவர்களோ, அந்த வாய்ப்பிலேயே அவர்களுடைய தாய்மொழியை ஆதிக்க மொழியாக்கி நிரந்தரமான ஆதிக்க வர்க்கமாக்கிவிட முயற்சிக்கிறார்கள்.

பாகிஸ்தானில் வங்காள மொழியினரும் உருது மொழியினரும், பூசலிட்டுக் கொண்டு இருப்பதற்குக் காரணம் இதுவே.

இதுபோலவே, இந்தியாவில் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமை பெற்றதும், இறந்துபோனதுமான புரோகித சமஸ்கிருத மொழியை நுழைக்க வேண்டும் என்று, ஒரு சாரார் கூச்சல்போடுகிறார்கள்! இன்னொரு சாரார், இந்தியை நுழைத்துக் கொண்டே, அதுதான் பொதுமொழி, அதுதான் தேசிய மொழி, அதுதான் அரசாங்க மொழி, என்று பொருளில்லாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்! இதற்கெல்லாம் காரணம்; பேராதிக்க வெறியே!

இந்திமொழிக்காரர்கள், தாங்கள் பெரும் பான்மையினர் என்கிற விசித்திர காரணத்தினாலேயே இந்தி, ஏகாதிபத்திய மொழியாகத் தகுதி உடையதென்று கூப்பாடு போடுகிறார்கள். இவர்கள் இன்றைய இந்தியாவின் நாலு பக்கங்களிலும் பரவிக்கிடக்கிற ஆங்கிலம் தெரிந்தவர்களைவிடப் பெரும்பான்மையினராக இருக்க முடியாது.

அப்படி இருந்தும் ஆங்கிலம் அந்நிய மொழி என்கிற ஓரே இழுக்கை எடுத்துக் காட்டிக்கொண்டு அரசியல் நிருவாக முனையில் நாம் அதிகம் பேர் இடம் பெற்றிருக்கிறோம் என்கிற தைரியத்தினால் "வருங்கால இந்தியாவை நாங்கள்தான் ஒரு குடைக்கீழ் ஆளப்பிறந்தவர்கள்" என்று அறைகூவுவதுபோல் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

மனிதனுக்கு மனிதன் உறவு கொள்ளும் வேலையை முன்னின்று செய்வது மொழிதான்! இதை அனுபவ பூர்வமாக உணரவேண்டுமானால் வெளிநாடுகளுக்குச் சென்று பார்க்கவேண்டும்! தமிழன் ஒருவன் அயல்நாட்டுக்குச் சென்று அங்கே இன்னொரு தமிழனைச் சந்திக்கும்போதுதான் நாம் கூறுகிற உண்மை புலப்படும்! மொழி என்கிறபோது அதனதன் இன மொழிகளையும் சேர்த்தே எண்ண வேண்டும்!

வடஇந்திய ஏகாதிபத்தியம் ஏற்பட்ட பிறகு தமிழரும், தமிழ் இன மொழியாளரும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர், என்பதை ஒவ்வொரு அரசியல் வாதியும் ஆராய வேண்டும். அதற்கு தகுந்த ஆதாரங்களைத் தேடித்திரியவேண்டிய அவசியமில்லை. ஏகாதிபத்திய வெறியர்கள் அவர்களுடைய வெறியை இலைமறை, காய்மறையாக வைத்திருக்கவில்லை, பகிரங்கமாக பாராளுமன்றம் வரை வெறியாட்டம் ஆடுகிறார்கள். இதை உணர்த்துவதற்கு சமீப காலத்திய பாராளுமன்ற நடவடிக்கைகளே போதும்.

கொஞ்ச காலத்திற்கு முன்னால் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவர் கன்னடத்தில் பேசியதற்காக கேலி செய்யப்பட்டார்.

தற்போது இரயில்வே உதவி மந்திரியாக இருக்கும் திரு அளகேசன் அவர்கள் இந்தி தெரியாதவர் என்பதற்காக பாராளுமன்றத்தில்—அம்மன்ற உறுப்பினர்களால் அவமதிக்கப்பட்டார், அவருக்கு பரிந்து கொண்டு தமிழில் பேசிய உறுப்பினர்கள் அனைவரும் கேலி செய்யப்பட்டார்கள்!

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்திய அரசாங்கத்தை, இந்திக்காரர்கள், அவர்களுடைய ஏகபோக குடும்பச் சொத்துப் போலவும், குடும்ப நடவடிக்கை போலவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே.

பண்டித நேரு, இந்தி மொழியாளரின் வெறியாட்டங்களைக் கண்டிப்பதாகக் காணோம், கண்டிப்பதற்குப் பதிலாக 'தென்னிந்தியர்கள் வெறுத்து விடாதபடி நடந்து கொள்ளவேண்டும்' என்று, இராஜதந்திரம் போதிக்கிறார்.

அவர் மட்டும்தா? இந்தி வெறியரைக் கண்டிக்கவோ, இந்தி, அரசியல் மொழியாக தகுதியற்றதென்று எடுத்துக் கூறவோ, வடவர்களில் யாருமே முன்வரக் காணோம், அதற்குப் பதிலாக 'மெது மெதுவாக இந்தியைத் திணித்து ஆதிக்கம் செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்' என்கிற கருத்தமைந்த உபதேசம் செய்யப்படுகிறது.

சில சமயங்களில் தென்னிந்திய 'மொழிகளில் ஏதாவது ஒன்றை வட இந்தியர்கள் கற்றுக் கொண்டால் வேற்றுமை நீங்கிவிடும்' என்று பேசப்படுகிறது. இது, எவ்வளவு கடைந்தெடுத்த—கலப்பற்ற—ஏமாற்றுப் பேச்சு என்பதை சிறிது ஆராய்வோம்;

தென்னிந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றை வடவர்கள் கற்றுக் கொள்வதனால், திராவிடர் அடையும் நன்மை என்ன?

(இதனை அடுத்து விவரிப்போம்)

பம்பாய்

20—2—55 மாலை 5-மணிக்கு தேவேந்திர வேளாளர் சங்க இல்லத்தில் சங்கத் தலைவர் கே. எஸ். அனந்தப்பா முன்னிலையில் கே, பி. சிவக்கொழுந்து தலைமையில் சங்கத்தின் 7-வது ஆண்டு விழா வெகு விமரிசையாக நடந்தேறியது. பெருவாரியான சமூகத் தோழர்களும், பெரியோர்களும் வந்து கலந்து கொண்டனர். பொதுச்செயலாளர் எ. என். எஸ். மாடசுவாமி அவர்களால் கடந்த ஆண்டு வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர் தோழர்கள் எல். எம். கந்தசுவாமி கே. எஸ், சுப்பையா, கே. எஸ். கண்ணதாசன், கே. ஏ. அரிகிருட்டிணன், எ. எஸ். மோசஸ் ஆகியோர் சங்க வளர்ச்சியைப் பற்றியும் சமூக ஒற்றுமையைப் பற்றியும் பேசிய பின்னர் புத்தாண்டு நிர்வாகிகளாக கீழ்க் கண்டவர்களை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது:

தலைவர் கே. பி. சிவக்கொழுந்து, துணைத் தலைவர் எஸ். சி. சுப்பிரமணியம், நிர்வாகக்குழுத் தலைவர் எ. எஸ். மோசஸ், பொதுச்செயலாளர் கே. எ. அரிகிருட்டிணன், பொருளாளர் கே. எ. மனுவேல் கூட்டுச் செயலாளர்கள் கே. எஸ், பிச்சையா, பி. எஸ். எஸ். பாண்டியன் மற்றும் 15 நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன் கடந்த ஆண்டு நிர்வாகிகளின் சேவையைப் பாராட்டியும் புது நிர்வாகிகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும் விளக்கிப் பேசினர். அடுத்து சென்னை சர்க்காரால் அமுல் நடத்தப்பட்டு வரும் சமுதாய நலத்திட்டம் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு உதவியளிக்கும் திட்டமாக இருந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் அதனால் எவ்வித பயனும் அடைய முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய எம். எல். ஏ.க்களும் தக்க கவனம் செலுத்தி மேற்படி மக்களுக்கு உதவி கிடைப்பதற்கு ஆவன செய்யும்படியாக இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது என்றும் மற்றும் சிலதீர்மானங்களும் நிறைவேறின.

மதுரை

மதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்கிளையான அறிவு வளர்ச்சி படிப்பகம் 10 மாத காலமாக ஆட்டு மந்தை பொட்டல் சந்தில் இருந்தது 1—3—55 முதல் கரீம்சா பள்ளிவாசல் சந்தில் மாற்றப்பட்டது. இடம் மாற்றத்தை முன்னிட்டு புதிய கட்டிட திறப்பு விழா எஸ். எம். யாகுப் தலைமை வகித்து திறந்துவைத்தார். பின்பு, காதர் அறிஞர் அண்ணாவின் படத்தை திறந்து வைத்து அண்ணாவின் சேவைகளை பாராட்டிப் பேசினார். பின் தோழர்கள் ஏ. எஸ். கலைநேசன், எம். காசிம், எஸ். பி. எஸ், ஹமீது, கா. பி. மதியரசன், ஏ. சத்தியசீலன் ஆகியோர் கடந்த 10 மாத காலமாக படிப்பகம் செய்த சேவைகளைப்பற்றி பேசினர்.

இலக்குமணபுரி—பெங்களூர்

27—2—55 அன்று இலக்குமணபுரி தி மு. கழகத்தில் சர், பி. தியாகராயர் நாடகமன்ற அமைப்புக் கூட்டம் மா. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. கமிட்டியில் அறிவுப் பிரச்சார நாடகங்களை நடத்துவதென்றும் முதலில் வளர்மதி தீட்டிய சிந்தனை சிற்பி என்ற நாடகத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தி. மு. கழகக் கிளைகள் தேர்தல்

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர்ப் பேரூர்க்கிளை [சிறிய—பெரிய பஞ்சாயத்து (Minor-Major Panchayat) ஆட்சிப் பகுதி]—நகரக்கிளை [நகரமன்ற (Municipality) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக்கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக்கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்துகொண்டு மாவட்ட பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவோ உறுதிபடுத்திக் கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினராய் இருந்து வருபவர்கள், தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தல் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. 1—3—55-ம் நாளுக்குமேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்து கொள்ளக் கூடாது 1—3—55-க்குப் பிறகு அமைக்கப் பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப் பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27—3—55-ல் தேர்தல் நடத்திக், தேர்தலின் முடிவுகளைத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பெறும் "கிளைக்கழகப் பதிவுச் சீட்டி"ல் தெளிவாகக் குறித்து 31—3—55-ஆம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டுகளில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு. தலைமை நிலையம் வந்து சேர்ந்தால் தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக் கழகம் மட்டுமே மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல்கூடாது.

பொதுச் செயலாளர் அறிக்கை

●

27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்த வேண்டிய மாவட்டங்கள்:

சென்னை	சேலம்	மதுரை
செங்கற்பட்டு	கோவை	இராமநாதபுரம்
தென் ஆற்காடு	தஞ்சை	திருநெல்வேலி
வட ஆற்காடு	திருச்சி	நாஞ்சில்

கேரள, ஆந்திர, கருநாடகப் பகுதிகள்.

தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் :

1 ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை. ஒன்றுதான் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக்கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.

4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக்கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.

5. சிற்றூர்—பேரூர்—நகரம்—சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூட வேண்டும் [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municipal Wards) இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டியதில்லை. நகரக்கிளை தேர்தல் தான் இப்போது நடைபெறவேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளை தேர்தலில் ஒருபடியாகக் கலந்து கொள்ளவேண்டும். நகரக்கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Municiepal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக்கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]

6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச்செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

7. செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

8 சிற்றூர்க்கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க்கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக்கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக்கிளை அந்தந்த நகரமக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால் கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம் தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும், சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பி வைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளை தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்க மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பிவைக்கலாம்.

10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால் கூடும் கழக உறுப்பினர்கள். அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயல வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.

11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்ட வேண்டும்.

12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின்மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளம்பக் கூடாது.

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர்.

புதுவையில் கிளைக் கழகத் திறப்பு விழா

6–3–55 காலை 8 மணிக்குத் தேங்காய்த் திட்டிலும், 9 மணிக்கு உழவர் கரையிலும், 10 மணிக்கு முதலியார் பேட்டை, ஓர்லெயான்பேட் ஆகிய ஊர்களிலுமாகப் புதுவைத் தி. மு. க. வின் கிளைக் கழகங்களுக்குத் திறப்பு விழாக்கள் நடைபெற்றன. அன்று மாலை 6-30 மணிக்குப் புதுவை ஒதியஞ்சாலை மைதானத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது; திறப்பு விழாக்களிலும் பொதுக் கூட்டத்திலும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம், எல், ஏ., சி. பி. சிற்றரசு ஆகியோர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் கூட்டத்திற்கு வந்திருந்த பெரும்பாலான மக்களும் இச்சொற்பொழிவுகளைப் பாராட்டியதோடு, இதுபோன்ற கூட்டங்கள் பல இங்கு அடிக்கடி நடைபெற வேண்டுமென்றும் பேசிக்கொண்டே சென்றது குறிப்பிடத்தக்கதாகும்.

புதுவையில் "நம் நாடு"

நம் இயக்க நாள் இதழாகிய "நம் நாடு" புதுவைத் தி. மு: கழகத்தில் கிடைக்கும்: தேவையுள்ளவர்கள், முன்பணத்துடன் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

ச. சிவப்பிரகாசம்,
191, காந்தி வீதி, புதுவை

இலக்குமணபுரி

பெங்களூர் இலக்குமணபுரி தி. மு. க. செயற்குழு கூட்டம் எம். கிருட்டினன் தலைமையில் 6–3–55 காலை கழக மனையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

பொதுச்செயலாளர் அறிக்கையின்படி ஐந்தாண்டு திட்ட கண்டன நாளை 20–3–55 காலை 11–மணிக்கு கழக எதிர் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்துவது. 13–3–55 மாலை 4 மணிக்கு நமது மாவட்ட செயலாளர் எ. டி. பிரான்சிஸ் முன்னிலையில் நிர்வாகக்குழு தேர்தல் நடத்துவது,

கடந்த ஆண்டு வரவு செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப் பட்டது.

நகரே வருக, நவரஸம் பருக!
டாக்டர் குருசாமி முதலியார்
டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியில்
நாடகப்பேராசிரியர்
ப. சம்பந்தனார் தலைமையில்
நாடகம், சினிமா, இலக்கியத் துறைக் கலைஞர்களைத் தேர்தல் குழுவினராகக் கொண்டு
நாவரசு எழுதிய நவரஸ நாடக
'நடிப்புப் போட்டி'
13-3-55 ஞாயிறு மாலை 6-மணி
கட்டணம் ரு 2, 1. பெண்கள் அணா 8

கம்பம்

4–3–55 இரவு கம்பம் காந்திமதி நிலையத்தில் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் துணைச் செயலாளர் வி. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

கண்ணதாசன் அவர்களின் தந்தையார் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

20-3–55 நடைபெறவேண்டிய 'ஐந்தாண்டு திட்ட கண்டனநாள்' பொதுக் கூட்டத்தை 23–3–55ல் நடத்துவது.

அருப்புக்கோட்டை

அருப்புக்கோட்டை தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 6—3—55 இரவு 10–மணிக்கு 'அறிஞர் அண்ணா தெரு' சமீபமுள்ள கழக அலுவலகத்தில், செயலாளர் தோழர். சு. நடராசன் அவர்கள் தலைமையில் கூடி, விருதை எம். என். பெரியசாமி, சாத்தப்பர், (கண்ணதாசன் தந்தையார்) ஆகியவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். தென்னரசு
தெற்கு வீதி, திருக்கோட்டியூர்
இராமநாதபுர மாவட்டம்.

மலர்களிலே தலைசிறந்தது !
மலேயாவில் பெரியார்
தன்மான இயக்கத் தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் மலேயா சுற்றுப்பயணம் செய்த போது மலேயா மக்கள் அளித்த வரவேற்பு, பெரியார் ஆற்றிய சொற்பொழிவு. புகைப்படங்கள், மற்ற குறிப்புகள். அனைத்தும் அடங்கிய
வண்ண மலர் : விலை அணா எட்டு
முன்பணம் அனுப்ப வேண்டும். கழிவு 20 சதவிகிதம்
கே. பிச்சையன்
189, அப்பர் சிராங்கூன் ரோடு. சிங்கப்பூர் 13.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்

27-2-55 ந் தேதி யன்று மாலை மூன்று மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகத்தில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழக அமைப்புக் குழு கூட்டம் தோழர் அய்யாசாமி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் பி. அய்யாசாமி, வி. ராயப்பா அமைப்பாளர் இரா சுந்தரம் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்து எதிர்கால வேலைகள் பற்றி குறிப்பிட்டனர். மற்ற அமைப்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய எண்ணங்களைத் தெரிவித்தனர். இறுதியில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் என். மாரியப்பன் அவர்களை பொருளாளராக தேர்ந்தெடுத்தும், கோத்தாரி, பங்கஜாமில் கமிட்டிகளை இக்குழு அங்கீகரிக்கிறது.

தொழிற் சங்கத்துறையில் ஈடுபடுவதென முடிவு செய்ததை வரவேற்று அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தனது நன்றியை இக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பேரவையை மார்ச் மாதம் இறுதியில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டதுடன் இதற்காவன செய்ய அமைப்பாளர் இரா. சுந்தரம் அவர்களுக்கு குழு முழு அதிகாரம் கொடுக்கிறது.

பம்பாய் மாவட்ட தி. மு. க. தேர்தல்

பம்பாய் மாவட்ட தி. மு. க. தேர்தல் 20-2-55 மாலை 6-30 மணிக்கு தேர்தல் அதிகாரி தோழர் இரா. நம்பி நாராயணன் அவர்கள் தலைமையில், குடியரசு நிலையத்தில் நடைபெற்றது.

புத்தாண்டு செயலாளராக தோழர். எஸ். தியாகராசன் அவர்களும், துணைச் செயலாளராக தோழர். யோ. தர்மராசன் அவர்களும், பொருளாளராக தோழர், பென்னியமேன் அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் தோழர் வள்ளிநாயகம் அவர்கள் நன்றியவில கூட்டம் இனிது கலைந்தது.

*

ப. தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 3-3-55 வியாழன் இரவு 8.15 மணிக்கு "திராவிடரகத்தில்' தோழர். பி எஸ். செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் இரா. மா. சண்முகராசன் அவர்களால் திராவிடப் பண் பாடப்பட்டது.

கடந்த இரண்டு செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சிகளும், செயலாளரால் படித்துக் காண்பிக்கப்பட்டு திருத்தமின்றி ஒப்புக் கொள்ளப்பட்டது. அஞ்சல் போக்குவரத்துக்களும் படித்துக் காண்பிக்கப்பட்டது.

தி. மு. க. பொதுக்குழு முடிவிற்கிணங்க 20-3-55-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் தாராவி வ. உ. சி. திடலில் கொண்டாடுவதெனவும், தலைவராக தோழர். சி. த. மு. இர. ஆரியசங்காரன் அவர்களையும். பேச்சாளர்களாக தோழர்களான த. மு. பொற்கோ, புலவர் தனிக்கொடி, புத்தரசு, சு. வள்ளிநாயகம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ப. தி. மு. க. சார்பாக சொற்பயிற்சிக் கூட்டம் நடத்துவதெனவும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பையும், கண்டனக் கூட்டத்தில் சொற்பெருக்காற்ற இன்னும் இருவரைச் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பையும் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பம்பாய்—பாண்டுப்

3—3—55 மாலை 7-மணி யளவில் பாண்டுப் தி. மு. க. புத்தாண்டு செயற்குழு தேர்தல் தோழர் பென்னியமேன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் செயலாளராக வி. தேவதாசன், துணைச் செயலாளராக டி. ஏகாம்பரம், பொ. எம். ஏ. சாக்கு மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக எம். டேவிட், எம். வி மணி, பி. வி. பொன்னியமேன், எஸ். விசுவநாதன் ஆர். தாசன், காசு, சேதுராமன், எ ராஜேந்திரன், எம். எஸ். தாமஸ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்பின் தலைவர் முடிவுரை கூற செயலாளர் நன்றி கூற கூட்டம் கலைந்தது.

மயிலரங்கம் தி. மு. க.

வெள்ளக்கோவில் அடுத்த மயிலரங்கம் தி. மு. கழக சார்பில் 5-3-55 மாலை பொதுக் கூட்டமும் இரவு பிரச்சார நாடகமும் சிறப்புற நடந்தேறியது. ஊரெங்கும் வளைவுகள், தோரணங்கள் கழகக் கொடிகள் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாலை 5-மணிக்கு தோழர்கள் என். வி. நடராசன், மேடவலசு சிதம்பரனார், ஈரோடு அப்பாவு, வெள்ளக்கோவில் முத்துசாமி கூட்டத் தலைவர் பெரியவர் கே. எஸ். எஸ். ஆகியவர்களை வரவேற்று மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று சிற்றுண்டி அளித்தனர்.

மாலை 7-30 மணிக்கு கன்னிவாடி. ஊராட்சி கழகத் தலைவரான பெரியவர் கே. எஸ். எஸ். அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தாராளமும் சர்க்கரை. வெள்ளக்கோயில் முத்து, ஈரோடு அப்பாவு, மேடவலசு சிதம்பரனார் ஆகியோர் பேசிய பின் என். வி. நடராசன் கழகக் கொள்கைகளை விளக்கி அடுத்து நடைபெறயிருக்கும் மாநில மாநாட்டைப் பற்றியும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் பாலசுப்ரமணியம் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது. துவக்கத்தில் மயிலரங்கம், மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள கிளைக்கழகங்களின் சார்பில் கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன.

இரவு 11-மணிக்கு தோழர் சி. முத்துச்சாமி தலைமையில் ஓரத்தபாளையம் கழகத் தோழர்களால் கல்லறையின் காட்சி என்ற நாடகமும் நடைபெற்றது.

மீர்சாகிப்பேட்டை தி. மு. கழக ஆண்டு விழா

சென்னை, மீர்சாகிப் பேட்டை (43 வது வட்ட) தி. மு. கழக 4-ம் ஆண்டு விழா 1-3-55 செவ்வாய் மாலை நடைபெற்றது. கூட்டம் நடைபெறும் இடமும், கழகப்பணிமனையும் மின் விளக்குகளாலும் கொடிகளாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பேட்டை வாழ மக்களும், தாய்மார்களும் பெருமளவில் விழாவிற்கு வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. விழாவிற்கு தோழர் கோ. இளவரசு தலைமை தாங்கினார் தோழர் எ, கே. வில்வம் சிறிது நேரம் பேசிய பின்னர் ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிடம் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசினார். இறுதியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் திராவிடம் பிரிய வேண்டியதன் காரணங்களை தக்க சான்றுகளுடன் விளக்கி நீண்டதோர் சொற் பொழிவாற்றினார். செயலாளர் மு. புரட்சிமணி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது கூட்டத்தில் உண்டி மூலம் ரூ. 13—5-9 வசூலாயிற்று.

பேராசிரியர் பேசுகிறார்...தொடர்ச்சி

சார்ந்த இடத்திலிருந்தே வேலையாட்களை ஏவிவிட்டு 20 லட்சம் சம்பாதிக்கச் செய்யும் தொழிலும் உண்டு. அந்தத் தொழிலெல்லாம் ஊதியத்திற்கேற்ப உழைக்கும் தொழிலென மக்கள் மனதில் படிந்திருக்கிறது. துணிச்சலாக எந்தக் காரியத்தையும் செய்விக்கும் அது போன்ற தொழிற்துறையாக என் தொழில் அமையவில்லை.

பொருளாதாரப் பேராசிரியர் இராமமூர்த்தி என்னிடம் கூட பொருள் திரட்ட வேண்டிய அவசியத்தை அடிக்கடி வலியுறுத்துவார். "எளிய வாழ்க்கையிலே தான் மகிழ முடியும். அந்த வாழ்க்கையைத்தான் நான் விரும்புகிறேன்" என்று ஒருநாள் அவரிடம் சொன்னேன். "நிறைய சம்பாதிக்க வேண்டும் பெருமிதமாக வாழ வேண்டும்" என்று அவர் சொன்னார். இராமமூர்த்தி—ஒருபொருளாதாரப் பேராசிரியருக்கு பண ஆசை இருப்பது இயல்புதான். ஆனால் இதன் காரணமாகப் பேராசிரியர் என்றால் பண ஆசை உடையவன் என்று சொல்லிவிட முடியாது.

இப்போதுதான் என் பழைய ஞாபகம் வந்தது. சிறு குழந்தையாகக் கிராமத்தில் இருந்த போது தோன்றிய எண்ணங்கள் அகன்றபாடில்லை. எங்கள் இல்லம் குடிலாக இருந்தாலும் எதிர்த்த வீட்டில் வாழ்ந்த அந்த நாமக்கல் அம்மாவின் வீடோ பங்களாவாகக் காட்சியளித்தது. அனுதினமும் உயர்ந்த மனிதர்கள் அவருடைய வீட்டிற்குக் காரில் வந்து போய்க்கொண்டே இருப்பார்கள் அந்த அம்மாவின் கணவர் நிறைய சொத்தும் சம்பாதித்து விட்டார். உயர்ந்த வீடும் உன்னதமான வாழ்வும் செறிந்து கிடக்கும் செல்வமும் கொண்டு பொலியும் அவர்களுக்கு மனக் கவலை சிறிதும் இருக்காது என்றுதான் எண்ணுவார்கள். "எவ்வளவோ பணக்கார் வாழவு வாழ்கிறார்கள். நாம் மட்டிலும் ஏழையாக வாழ்ந்து நலிய வேண்டிய நிலையில் உள்ளோமே" என்ற எண்ணம் அப்பொழுதே என் பிஞ்சு உள்ளத்தில் ஏற்பட்டு விட்டது. இப்பொழுது கூட உணருகின்றேன் வாழ்வில் மக்கள் செல்வர்களாயும் நலிந்தோராயும் வாழ்வதோடு மட்டுமன்றி பிஞ்சு உள்ளங்களிலும் இந்த வேறுபாட்டை உண்டுபண்ணி, நலியச் செய்கின்றனரே என எண்ணும்போது மிகவும் வருந்துகிறேன்.

என் அன்னையோ வறுமையின் காரணமாகக் கலக்க முற்றவளாகவே இருக்கின்றாள், வறுமையின் காரணமாக அழுதாலும் சிறுவனாக இருக்கும் போது பள்ளியைவிட்டு ஓடோடி வரும் போது பார்க்கும் தாய் மகிழவும் வழியுண்டு என்பதையும் உணர்ந்தேன் அம்மா என்னோடு கொஞ்சி விளையாடுவதைப் பார்க்கும் எதிர்த்த வீட்டு நாமக்கல் அம்மா இப்படி ஒரு செல்வம் தனக்கு இல்லையே என எண்ணிக் கசிவார்களாம்! பொருட் செல்வமிருந்தும் மக்கட் பேற்றினல் பெரும் இன்பத்தை அடைய முடியாது என்ற நல்ல பாடத்தை நாமக்கல் அம்மா போன்றோரின் அனுபவத்தினால்தான் அறிய முடிகிறது இராமமூர்த்தி பணப்பெருக்க மில்லாவிடில் வாழ்வு சுவைக்காது என்று சொல்லும் போதெல்லாம் என் அம்மாவின் சிந்தனையும் எதிர்வீட்டு நாமக்கல் அம்மாவின் சிந்தனையுமே என் மனதில் தோன்றுகிறது.

என் அன்னையோ எவ்வளவுதான் கவலை தோய்ந்த முகத்தோடு இருந்தாலும் என்னைக் கண்டவுடன் முகப்பொலிவு பெறுகிறாள். கோடிக்கணக்கில் பணம் இருந்தும் அந்த நாமக்கல் அம்மாவின் கவலையைப் போக்க எந்தச் செல்வத்தையும் பெறவில்லையே என்பதைச் சிந்தித்த போதுதான் எது செல்வம் என்ற உண்மை என் உள்ளத்தில் பதிந்தது. கொட்டிக்கிடக்கும் பணமும் உயர்ந்த பங்களாவும் பட்டுப் புடவையும் அளிக்காத ஓர் பேரின்பத்தை ஓர் ஏழைத் தாய் பெறமுடிகிறது, பெற்று எடுத்த குழந்தைதான் செல்வம் என்று எண்ணும் மனப்போக்கு தாய்ப் போக்கு; உலக மக்களின் மீது அன்பை வளர்க்கும் செல்வம் வேண்டும் என்று நான் எண்ணுவதுகூட அந்த நாமக்கல் அம்மாவின் சோகக் கதையால்தான். வைடூரியப் பதக்கமும் முத்து மாலையும் பட்டுப் புடவையும் அணிந்து கொண்டு வந்த அந்த நாமக்கல் அம்மா உனக்கு இவ்வளவு செல்வம் உண்டா என என் அன்னையை கேட்டார்களாம். இருக்கிறது; காட்டுகிறேன் எனக்கூறி அந்த நாமக்கல் அம்மாவை கூட்டிக்கொண்டு வந்து தொட்டிலில் உறங்கும் இளவலைக் காட்டி இதுதான் என் செல்வம் என்றாளாம்.

அந்தத் தாய்க்குப் பிறந்த காரணத்தால்தான் பணஆசை கொள்ளா மனமாகப் பயிற்சித்து என் உள்ளத்தை இயற்கை நெறிக்கு இயக்குவிக்கிறேன். காலவெள்ளத்தில் கேளிக்கையில் ஆர்வம் கொள்வது கூட அளவுக்கு மீறிய பணத்தால்தான் என்று கூட உணர்கிறேன். உண்மையான செல்வத்தை உணர்த்தும் என் அன்னையை பைத்தியக்காரி என்று சொல்வது போலவே பணம் பெருக்கத் தெரிந்தும், பெருக்காத என்னை என் நண்பர்கள் பைத்தியக்காரன் என்று சொல்கிறார்கள். இதுவும் ஒரு வகையான உலகம்!

(பிறவற்றை அடுத்து சொல்லுகிறேன்—கேளுங்கள்)

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்;

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92. தெகு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்



26

முன்பு :—

அமுதாவிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்த நர்மதா சிதம்பரம் செல்ல முடிவு செய்தாள். காலை மலர்ந்ததும் ரயிலேறக் காத்திருந்தாள்.

●

முல்லையின் அருமை, முகர்ந்தவனுக்குத்தானே தெரியும்? குற்ருலத்தின் கவர்ச்சி, அனுபவித்தவனுக்குத்தான் புரியும்! நிலக் குமரியின் மயில் கழுத்துக்கு மின்னெளி பரப்பும் பொன்னரம் போல அமைந்த அந்த ஜீவநதியின் சலசலப்பு புதுஉலகின் கீதமேதான். கண்டாரை மயக்கும் காந்தமலே. அதன் இடையிடையே பரவிப் படர்ந்திருக்கும் நீண்ட மரங்கள். அந்த மரங்களிலே தாவிக் குதித்து விளையாடும் ராம தூதர்கள். நீராட வந்தோர், நிலமடந்தையின் திருமேனி கண்டோர் களிசோலையிலே ஆடும் மயிலாயினர்!

சோலை அழகைக் கண்டு சுந்தரப் புன்னகையை வீசிவந்த காலைக் கதிரவன் மலைவீழ்ச்சியின் மகத்துவத்துக்கு ஒரு புது அத்தியாயத்தைச் சேர்த்துக் கொண்டிருந்தான். அந்த உலக உதயத் தூதுவனின் மகிழ்ச்சிக் குரலோசை மாடியின் ஜன்னலிலே மோதி எதிரொலித்தது. படபடப்பாக வேலைகளைச் செய்து கொண்டிருந்த வனஜா வேலையோடு வேலையாக ஜன்னல் கதவை நன்ருகத் திறந்து வைத்தாள், பக்கத்து வீட்டிலிருந்து கிளம்பிய கடியார மணியோசை ஒன்பது முறை அலறிவிட்டு அடங்கியது. தன் கையிலே கட்டியிருந்த 'லேடிஸ் வாட்'சை உற்றுப்பார்த்தாள். இரவோடு இரவாகவே தூங்கிப்போன அந்த சின்னஞ் சிறு கடியாரம் இன்னும் எழும்பவேயில்லை. கையிலெடுத்து முட்களை சரியாகத் திருப்பி வைத்துவிட்டு 'சாவி' கொடுத்தாள். வனஜாவின் விரல்கள் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தன. கண்களோ எங்கோ சுவற்றில் மாட்டியிருந்த படத்தின்மீது தாவியது. அந்த 'குரூப்' போட்டோவிலேதான் அவளது கவனம் முழுதும் பதிந்தது. சிரித்த ரோஜாவை சிகப்புச்சட்டையிலே குத்திக் கொண்டு புதுமனிதன் போல பிரின்ஸிபாலுக்குப் பக்கத்திலே அமர்ந்திருந்தான் சேகர். அவனுக்குப் பின்னே தோழிகள் புடைசூழநின்றிருந்தாள் வனஜா. படத்திலிருந்த சேகரை உற்றுப் பார்த்துவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டாள். விரல்களோ சாவி கொடுப்பதை இன்னும் நிறுத்தவில்லை. அவளின் எண்ணங்கள் தான் எங்கோ சிறகடித்துப் பறந்தன......

கல்லூரி விழாநாள், விழாவிலே தான் நடத்தப்போகும் சொற்பொழிவுக்காக ஏதேதோ குறிப்புகளைத் திரட்டிக் கொண்டிருக்கிருன் சேகர், அவன் அறைக்குள்ளே நுழைந்த வனஜா விழா நேரம் நெருங்கிவிட்டதை அறிவிக்கிருள். சேகர் தனது கைக்கடிகாரத்தைப் பார்க்கிருன். அது ஓடவேயில்லை. சிரித்துக் கொண்டே கடியாரத்தைக் கையிலெடுத்து சாவி கொடுத்துக் கொண்டு...

"நின்[றுவி]டுகிற கடியாரத்தைச் சாவி கொடுத்து ஓடவைக்கிருேம் வனஜா. ஆனல் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல...நல்ல ஐடியா கிடைத்துவிட்டது வனஜா சொற்பொழிவுக்கு. எங்கெங்கோ தேடிக் கொண்டிருந்தேன் புத்தகத்திலெல்லாம். இதோ ஜீவனுள்ள கருத்து கிடைத்தேவிட்டது!

...பேசிக் கொண்டே ஆடை மாற்றிஞன். முன்னே விழுந்து முகத்தை மறைத்துக் கொண்டிருந்த கேசத்தை பின்னே இழுத்துவிட்டு ஒரு தினுசாக வாரிவிட்டுக் கொண்டு விழா ஹாலுக்கு சேகரும்—வனஜாவும் வந்து சேர்ந்தனர். விழா நிகழ்ச்சிகள் என்னென்னமோ நடந்து முடிந்தன. அதிலெல்லாம் சிந்தயை கொள்ளை கொடுத்துவிடவில்லை வனஜா. சேகரின் கலை பொதிந்த சொற்பொழிவு நேரத்துக்குத்தான் காத்திருந்தாள். அந்த நேரமும் வராமற் போகவில்லை. அரங்கிலே கம்பீரமாக நின்று பேசிக்கொண்டிருந்தான் சேகர். அந்தக் குரலோசையின் துவக்கமே எல்லோரையும் அவனது கருத்தின் பக்கம் இழுத்து நிறுத்தியது. வனஜாவுக்கோ மகிழ்ச்சியின் எல்லை.

..."நின்றுவிடுகிற கடியாரத்தைச் சாவி கொடுத்து ஓடவைக்கிருேம். வாழ்க்கை அப்படிப் பட்டதல்ல! இழந்த வாழ்வு புது வாழ்வாக வேண்டுமானல் அது கடிகாரத்துக்கு சாவி கொடுப்பது போல அவ்வளவு லகுவான காரியமல்ல. எவ்வளவெவ்வளவோ மாற்றங்கள் தேவை. திருத்தங்கள் மலர்புரிப் பயணம் போன்றதல்ல. தொல்லைகள் மலை! பெருமலை! தொல்லைக் காட்டைத் தாண்டிஞல்தான் புன்னகைதரும் முல்லைக் காட்டைக் காணமுடியும். உழைப்பும் பயணமும் அதிகந்தான். ஆனல் மாற்றங்கள் புது உலகின் வாழ்வு விளக்கங்களாகின்றன."

...அந்த லட்சிய விளக்கம் இன்று கிளப்பும் ஒலியைப்போல அவளின் காதிலே முழங்கிக் கொண்டேயிருந்தது. விரல்கள் கடியாரத்துக்கு சாவியைக் கொடுத்து முடித்துவிட்டன. அவளது சிந்தனையும் அறுந்து விழுந்தது. சேகரின் நினைவும் அவளது நெஞ்சத்தை அறுத்துக் கொண்டிருந்தது. நிலைக் கண்ணுடியின் முன்னே போய் நின்ருள். வேதனை உள்ளத்தின் எதிரொலி முகத்திலே தெரிந்தது. முகத்திலே பவுடரைத் தடவி சோபையை ஏற்படுத்திக்கொண்டு வெளியே புறப்படத் தயாராளுள் வனஜா.

தாமரைக் கரத்திலிருந்த சிறு குடையைச் சுற்றிக்கொண்டே பாதையிலே [நட]ந்து போய்க் கொண்டிருந்தாள். நடமாடும் நடனமயிலோ; உயிர்பெற்ற எல்லோரா எழிற் சிலையோ வென அதிசயிக்கும்காட்சியோடு கலந்து போயிருந்தாள். பாதையின் ஓரத்திலிருந்த பெட்டிக் கடையருகே ஒதுங்கித் திரும்பிஞள். பெட்டிக் கடையின் முன்னே நின்று சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தவனின் கண்கள் ஓரமாகத் திரும்பிய அவளைப் படமெடுத்தன. லாகவமாகத் திரும்பிக் கொண்டே மீண்டும் ஒருமுறை பார்வையை அவள் மீது விரட்டியடித்தான். நடையழகியின் விழியைக் கொத்தியது அந்தப் பார்வை. அவளோ வேறுபக்கமாகத் திரும்பிக்கொண்டு எட்டி நடைபோட்டுக் கொண்டிருந்தாள். சிகரெட் துணையுடன் தொடர்ந்தான் அவனும். பரவிவந்த சிகரெட்டுப் புகை பின்னே ஆளொருவன் தொடருவதை அவளுக்கு விளக்காமற் போகவில்லை. ஓரப் பார்வையால் நிலைமையை அறிந்து கொண்டே போய்க்கொண்டிருந்தாள். அவன் தலையிலே இழுத்துச் சேர்த்துக் கட்டியிருந்த சில்க் டவலும், அந்த ஆடம்பர உடையும் பின்னேட்ட நடையும் இருண்ட இதயத்தின்பிரதிபிம்பந்தான் என்பதை புரிந்துகொள்ள வெகு நேரமாகவில்லை. அவள் போகவேண்டிய இடமோ நீண்ட தூரம். எனவே பயணம் முடியவில்லை...தொடருபவனின் தொல்லையும் குறைபவே யில்லை.

வேக வேகமாக நடந்து கொண்டிருந்த வனஜாவின் உள்ளம் படபடத்தது. உணர்ச்சி நரம்புகளிலிருந்து ஏதோ ஒரு வகை நாதம் கலக்கப்பட்ட இதயத்தோடு கண்களைத் துடைத்தாள்...திக்பிரமையால் நின்றே விட்டாள். கால்கள் அசையவே மறுத்து விட்டன. கையிலேயிருந்த கைக்குட்டையால் நன்ருக முகத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டு கண்களை அகல விரித்துப் பார்த்தாள் ......அவளுக்கு முன்னே சேகர் செய்தித்தாளும் கையுமாக வந்து கொண்டிருந்தான். பின்னே திரும்பிப் பாரத்தாள்.........தன்னைத் தொடர்ந்தவன் தொடர்ந்துவந்து கொண்டே தானிருந்தான். சேகரும் அவளை நெருங்கி விட்டான். சிறுகுடையைத் தோளில் சாய்த்துக் கொண்டே புன்னகை பூத்து நின்ருள். நடந்துவந்த சேகர் தன் முன்னே வந்து நிற்பது 'வனஜா' என்பதை யறிந்ததும் வணக்கம் செலுத்திக் கொண்டே பேசத் துவங்கிஞன். வனஜாவும் கரம் குவித்தாள்—திறந்த குடை மூடுவதுபோல்யிருந்தது அந்தக் கரக் குவியில்!

'வனஜா நீ குற்ருலத்திலா...?'

ஆம்......சேகர் குற்ருலம்தான் எனக்கிப்போது புகழிடம். நீ எங்கே சேகர் இங்கே...'

'ஓய்வு தேடி வந்தேன் வனஜா'

'தங்கி யிருப்பது எங்கோ?'

எனக்கென்ன இங்கே பங்களாவா; ரெஸ்ட் ஹவுஸோவா யிருக்கிறது. லாஜில் தானிருக்கிறேன்.

இப்போது பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது சேகர். உன்னை பல நாளைக்குப் பிறகு சந்தித்ததிலே மலையளவு மகிழ்ச்சி. மாட வீதியிலேதான் தங்கி யிருக்கிறேன். மாலையிலே சந்திக்க முடியுமா சேகர்?

"ஓஹோ...வனஜாவுக்கு இப்போது ஆசிரியைத் தொழிலோ? அதுதான் கட்டளைத் தம்பிராஞுகிருய். சரி உன் வீட்டு நம்பரை எழுதிக் கொடு முடிந்தால் மாலை வருகிறேன்."

"முடிந்தா லென்ன...அவசியம் வந்து போ சேகர்"

...பேசிக் கொண்டே ஜாக்கெட்டிலே குத்தியிருந்த பேஞவை எடுத்துத் துண்டுச் சீட்டிலே வீட்டு நம்பரையும் விலாசத்தையும் எழுதிக் கொடுத்தாள், அதை வாங்கிக் கொண்டு சிரிப்பை சிந்திக்கொண்டே சேகர் நகர்ந்து கொண்டிருந்தான். தாழ்ந்திருந்த தலையை மேலே தூக்கிப் பார்த்தான். பாதை ஓரத்துப் பாலத்திலே வனஜாவைத் தொடர்ந்து வந்தவன் அமர்ந்திருந்தான். நடந்து கொண்டே பார்வையை அவன்மீது பாயவிட்டான் சேகர். எங்கோ அவனைப் பார்த்தது போலப்பட்டது சேகருக்கு. மீண்டும் உற்றுப்பார்த்தான் ஆமாம் ரயிலிலே அவன் சந்தித்த அதே துராத்மாதான் நள்ளிரவிலே குமரியின் கன்னத்தைச் சுவைத்து கன்னத்தை வீங்க வைத்துக் கொண்ட அந்தக் கொடியவன் தான் பாலத்திலே சாய்ந்திருந்தான், சேகரைப் பார்த்ததும் டவலால் முகத்தை மறைத்தான்.

பாலத்து ஓரமாகத் திரும்பி நடந்துவந்தான் சேகர், சேகர் திரும்பி வருவதைப் பார்த்ததும் பாலத்தைவிட்டு எழுந்து முன்னே தயங்கித் தயங்கி நடந்துவந்தான் அந்த சூதுக்காரன், நழுவிக் கொண்டிருந்த அவனது கையைப் பிடித்து நிறுத்தி டாக்டர் சேகர் பேசிக்கொண்டிருந்தான்,

"என்னப்பா சுகமா? நேற்று ரயிலில் சொல்லாமல் கூட நாங்கள் தூங்கும்போது இறங்கிப் போய்விட்டாயே! நீயும் குற்ருலத்தில்தானு? தங்குமிடம் எங்கே?"

"இல்லை மிஸ்டர். குற்ருலத்திலே நான் இறங்கனும்னுவரலே, இங்கே தங்கப் போறதில்லே. பிஸினஸ் ஜோலியா வந்தேன். ராத்திரி மெயிலிலே கிளம்பப் போறேன்,"

"சரி வாப்பா நம்ம ரூமுக்குப் போவோம்..."

...தப்ப முடியாத அந்தப் பாலத்துவாசி சேகரோடு நடந்து கொண்டிருந்தான். சேகரின் கையிலிருந்த பேப்பரை வாங்கி விரித்துப் படித்துக் கொண்டே பாதையிலே நடந்து போய்க் கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்

அய்யர்வாளின் உபதேசம்

●

சுதந்திரம் கிடைத்த பிறகு நம்நாடு வேறெந் தத் துறையில் முன்னேறவிட்டாலும், தொட்ட தற்கெல்லாம் அபிப்பிராயம் கூறும் விசித்திரத்தில் வெகு முன்னேறியிருக்கும் "பெருமை"யை நிறைய பெற் றிருக்கிறது.

நாட்டை எதிர்நோக்கியும், அல்லது சர்க்கா ரைப் பொருத்தமட்டிலும் அவ்வப்போது சில பிரச் னைகள் எழுவது இயற்கையேயாகும். எனினும் அந்தந்த பிரச்னைகளில் யார்யாருக்கு அனுபவமும் நெருங்கிய தொடர்புமிருக்கிறதோ அவர்கள் குறிப் பிட்ட பிரச்னைகளைக் குறித்து—தங்களின் கருத்தை அறிவிப்பதானது அப்பிரச்னை ஒழுங்குபெற துணை யாய் நிற்கும். மற்ற நாடுகளில் இத்தன்மையைத் தான் நாம் காணமுடிகிறது. ஆனால் 'சுதந்திர' இந் தியாவில், குறிப்பாக தென்னாட்டில் இதற்கு நேர் மாறான கண்றாவிக் காட்சிகளையே நாம் காண வேண்டியிருக்கிறது.

வெங்காய வியாபாரத்தில் நிபுணர்—அவர் அத் துறையைப் பற்றிப் பேசுவதில் பயனுண்டு. அவர் அதோடு நிற்கமாட்டார். பெரியாஸ்பத் தூக்கிவிட் டது குறித்து நீண்டதோர் அறிக்கை விடுவார்!

அதுபோலவே வேதாந்தம் பேசும் துறையில் மகா நிபுணராயிருப்பார். அவர் அத்துறையில் அபிப்ராயம் கூறுவதானது வேதாந்தத்தை நம்பி யிருப்போருக்குப் பயனளிக்கலாம் ஆனால் அவர் அழ குப் போட்டிகளின் முடிவுகளைப்பற்றி சுடச்சுட அபிப்ராயம் தெரிவிப்பார்!

நாட்டை ஆளவேண்டிய-மக்களை வாழவைக்க வேண்டிய பணியை மேற்கொண்டுள்ள அமைச்சர் கள் அதற்கான பேச்சுக்களைப் பேசுவதைவிட மோட்ச லோகத்திற்கு விரைவில் செல்ல குறுக்கு வழி (Chord Line) எது என்பதைக் கண்டு பிடிப் பதிலும் அதற்கான சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டு அபிப்ராயம் சொல்வதிலும் முன்னவர்!

சுருங்கக் கூறவேண்டுமானால் கசாப்புக் கடை வைத்துப் பொருளீட்டிக் கொண்டே ஜீவரட்சகப் பிரசார சபையின் போஷகராகவும் ஒருவர் இருப்பா ரானால் எவ்வளவு விசித்திரமோ அதுபோலவே நம் நாட்டின் பொதுவாழ்வில், அபிப்ராயம் கூறும் வித் தையில் சிலர் பிரக்யாதி பெற்று வருகிறார்கள்!

மனிதனாகப் பிறந்தவனுக்கு எல்லாப் பிரச்னை யும் தான் தேவை எதைத்தவிர்க்க முடியும் என்று சிலர் கேட்கக்கூடும். ஜவுளி வியாபாரிக்கு அத் தொழிலைத் தவிர வேறு பிரச்னையே அவசியமில்லை யென்று நான் கூறவரவில்லை. அந்த ஜவுளி வர்த்த கர் தான் சம்பந்தப்பட்ட அதுவும் பழக்கமான பிரச்னையைப்பற்றி கூறும் அபிப்ராயம்தான் நிறைவு பெற்றிருக்க முடியும். மற்றவைகள் நுனிப்புல் மேய் வதைப் போலத்தானிருக்க முடியும்.

*

சென்ற வார இறுதியில் சென்னையில் "குழந் தைகள் சினிமாப்படத் திருவிழா" நடைபெற்றது. இவ்விழாவினை சென்னை கல்வி அமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் துவக்கி வைத்தார். நீதிபதி ஏ. எஸ். பீ. அய்யர் அவர்கள் தலைமை வகித்துப் பேசியிருக்கிறார்! இவர்கள் இருவரும் திரைப்படத் துறையைக் குறித்து கூறியுள்ள அபிப் பிராயங்களைக் கூர்ந்து கவனித்தால் நாம் மேலே எடுத்துக்காட்டிய விளக்கத்தின் அவசியத்தை தோழர்கள் உணரக்கூடும்.

அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் பேசுகை யில் "சினிமாவைப் பின்பற்றி எல்லாவற்றிற்குமே ஆபாச விளம்பரங்களைப் போடுவது பழக்கமாகி விட்டது. கைத்தறித் துணி விற்பனைக்கும் ஒரு பெண்ணின் படம்! சோப் விற்பனைக்கும் ஒரு பெண்ணின் படம்! இவ்வித ஆபாச விளம்பரங் களைத் தடுக்க வழி காணவேண்டும். சினிமாவின் மூலம் கல்வியும் ஒழுக்கமுமே போதிக்கப்பட வேண்டும்." என்று கூறியிருக்கிறார்.

சினிமாப்பட விளம்பரங்கள்கூட ஆபாச நிலை யிலிருக்கக் கூடாதென்று அமைச்சர் சுப்ரமண்யம் கூறுவதிலிருந்து சினிமாப்படத்தின் தரம் அதன் தன்மை எவ்வளவு உயர் நிலையிலிருக்க வேண்டுமென் பது விளங்குகிறதல்லவா?

ஆனால் தலைமைவகித்த நீதிபதி ஏ, எஸ். பி. அய்யர் அவர்கள் கூறியுள்ள அபிப்பிராயத்தைக் கேளுங்கள். 'கிருஷ்ண லீலா, வள்ளி கல்யாணம் சிறந்த தத்துவங்கள் அடங்கிய கதைகள். இவற் றைப் படமாக்கிக் குழந்தைகளுக்குக் காட்டலாம் ...மைலாப்பூர் கபாலி கோவிலில் வருஷாவருஷம் நடக்கும் அறுபத்துமூவர் விழாவைப் பட மெடுத்து காட்டினால் நாத்திக ஒழிப்பு சங்கமே தேவையில்லை' என்று திருவாய் மலர்ந்தருளியிருக் கிறார் அய்யர்வாள்!

அய்யர்வாள் நாத்திக ஒழிப்பு சங்கத்தைத் தாங்கிப் பிடிப்பது ஒருபுறமிருக்கட்டும் அதைப் பற்றி நாம் ஒன்றும் கவலைப்படவில்லை. ஆனால் குழந் தைகளுக்கு நீதிபதி அய்யர் தேர்ந்தெடுத்த படங் களின் பெயரைக் கேட்டீர்களா! வள்ளி கல்யாணம் —கிருஷ்ணலீலா!

இந்த இரண்டு கதைகளிலும் மலிந்துள்ள ஆபாசக் காட்சிகள், அமைச்சர் சுப்ரமண்யனார் குறிப்பிட்ட சினிமா விளம்பரங்களைவிட மோசமான வைகளல்லவா! விளம்பரங்களே அறிவை அடிப்படை யாகக் கொண்டிருக்க வேண்டுமென்று கூறிய அமைச்சர் சுப்ரமண்யனார், நீதிபதி அய்யரின் கூற் றினை ஏற்றுக் கொள்ள முன்வருவாரா! அது எப் படியோ தொலையட்டும். இவ்விருவரின் கருத்துக் களும் எவ்வளவு, வேறுபாடுகள் நிறைந்திருக்கின்றன என்பதை, தோழர்கள் சிந்திக்க வேண்டுமென்பதே நமது இந்த எடுத்துக் காட்டாகும்.

நம்நாட்டில் 'அபிப்ராயம் கூறும் விசித்திர விளையாட்டு எப்படி நடைபோடுகிறது பார்த்தீர் களா! கலைத்துறையில் இதுவும் ஒரு கூத்து போலும்!

—நக்கீரன்

"ராமர்" கைதானர்!

●

நடிகவேள் எம். ஆர். ராதா தமது குழுவின ருடன், குடந்தை மீனுட்சி தியேட்டரில் 'லவ-குசன்' எனும் நாடகத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தார். இந்த நாடகமும் ஆஸ்திகத்தின் அஸ்திவாரத்தைத் தூள்தூளாக்கிவிடும் என்று கருதி சிவனடியார் திருக்கூட்டம், அருள்நெறி கழகம் ஆகியவைகளின் நிர்வாகிகள், சர்க்கார் அதிகாரிகளிடம் மனுகொடுத் ததின் பேரில் குடந்தை தாலூகாவில் 'லவ—குசன்' நாடகமோ அல்லது ராமாயண நாடகமோ (அவை களிலே ஒரு காட்சிகூட) நடத்தக்கூடாதென 144 தடை உத்திரவு பிறப்பிக்கப் பட்டது. ஆனால் நடிகவேள் ராதா, ராமர் வேஷத்துடனேயே 8.3.55 இரவு தடையுத்திரவை மீறவே ராமர் கைது செய் யப்பட்டார்.

சீனிவாசனுக்கு புதிய உத்தியோகம்?

நல்ல விதமான பக்தி நாடகங்கள் என்ற நீரோட்டத்தை எம். ஆர். ராதா நடத்தும் ராமா யணம் போன்ற குப்பை செத்தைகள் மறைக்கின் றன. இதுபோன்ற குப்பை செத்தைகளை விலக்குவ தற்கு நவாப் ராசமாணிக்கத்தின் நாடகமே வழி என்று சு. மி. ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் அவர் கள் நவாப் ராசமாணிக்கம் குழுவினர் நடத்தும் புராண நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகை யில் குறிப்பிட்டிருக்கிறார்

தோழர் சி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கு குப் பையைக் கிளறும் இந்த புதிய உத்தியோகம் கிடைத்திருப்பதுபற்றி புராண பக்தர்கள் பரவச மடைந்திருப்பதாக ஓர் வதந்தி உலாவுகிறது!

புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வெற்றி

●

புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கத் திற்கும், ஆலை நிர்வாகத்துக்கு மிடையே இருந்து வந்த தொழிற் தகராறு பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. தொழிற்சங்கம் நீண்ட நாட்களாக வற்புறுத்திவந்த கோரிக்கைகளில் பெரும் அளவு வெற்றியடைந்து விட்டது, தொழிற் சங்கத்தின் சார்பில் அதன் துணைத் தலைவர் டி. பி. மூர்த்தி (தி. மு. க.) செய லாளர் பி. எம். முத்து, துணைச் செயலாளர் எ. ரகி மான். சென்னைத் தோழர் கே. பிரபு ஆகியோர் நிர் வாகத்தினருடன் பிப்ரவரி 25, 26, 27 தேதிகளில் சென்னையில் இறுதியாகப் பேச்சு வார்த்தை நடத்தி உத்தேச ஒப்பந்த நகல் ஒன்றை தயாரித்தனர்.

அந்த ஒப்பந்த நகல் 2—3—55-ல் தொழிலா ளர் சங்க சிப்ட் பொதுக்கூட்டங்களில் விளக்கிக் கூறப்பட்டு தொழிலாளர்களின் ஒப்புதலோடு 3—3—55-ல். கையெழுத்தாகி அமுலுக்கு வந்துள் ளது ஒப்பந்தப்படி குறிப்பாக மாதச் சம்பளக் காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5—10—0 வீத மும், வாரச் சம்பளக்காரர்களுக்கு தினம் ஒன்றுக்கு 0—3—0 வீதமும் சம்பள உயர்வு கிடைக்கும். ஆலை மூடுவதற்கு முன்பு நிரந்தரத் தொழிலாளர் களாக இருந்தவர்கள் மீண்டும் நிரந்தரமாக்கப்படு வார்கள். மற்றும் ப்ராவிடன்ட் பண்ட், பண்டிகை லீவு, சிக்லீவு முதலிய பல்வேறு பிரச்னைகளுக்கும் ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற் கண்ட சலுகைகள் அனைத்தும் 1954-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதற்கொண்டே கணக்கிடப்பட்டு 15 தினங்களில் தொழிலாளர்களுக்குத் தரப்படும். ஒப்பந்தப்படி ஒரு ஆண்டு நான்கு மாதத்திற்கு பிரஸ்தாப கோரிக்கைகளில் தொழிற் சங்கம் தகரா றை கிளப்பக்கூடாது என நிபந்தனை செய்யப்பட் டுள்ளதாகத் தெரிகிறது.

●

பூங்கொத்துகள்

●

தோழர் இரா. இளஞ்சேரன் அவர்கள் தீட்டி வரும் பூங்கொத்துகள் இடையே சில வாரங்க ளாக வெளியிட இயலவில்லை. அதற்கான விவ ரங்களைத் திரட்டுவதில் தோழர் இளஞ்சேரன் அவர்கள் முக்கிய அக்கரை எடுத்துக் கொண் டதினால் வெளியிடுவது தாமதமேற்பட்டது.

எனவே அடுத்த வாரத்திலிருந்து வாரந் தோறும் தொடர்ந்து "பூங்கொத்துகள்" மணக்கும். 18—3—55 இதழில் பூங்கொத்து கள் பகுதியில் தில்லை வில்லாளன் அவர் களின் எழுத்தோவிய விவரத்தைப் படம் பிடித்துக் காட்டுவார் நண்பர் இளஞ்சேரன்.

"மேலிடத்தில் அமளி"

●

தலைப்பைக் கண்டவுடனே அரசியல் கட்சி களின் மேலிடம் என்று எண்ணிவிடாதீர்கள்! நம் மையெல்லாம் படைத்தாராமே ஆண்டவன் அந்த மேலிடத்தின் ஒரு சம்பவம்தான் இங்கே குறிப்பிடப் போவது!

வந்தவாசி (வ. ஆ.) ஈசுவரசாமி கோவில் மாசிமக தேர் விழா 6—3—55-ந்தேதி நடைபெற் தாம்! ஈசுவரனை தேரில் வைத்துக்கட்டி தேரை பலர் இழுத்து வந்தார்களாம்!

இப்படியாகத்தானே தேர் ஓடிக்கொண்டே யிருக்க, கட்டுண்ட ஈஸ்வரனுக்குக் கோபம் வந்தி ட்டதோ என்னமோ நம்மைக் கட்டிப்போட்டு வ வலமாக யிழுத்து வருகிறார்களே என்ற துயரமோ —திடீரென தேரில்கட்டியிருந்த சிங்கபொம்மையை அறுத்து சாயும்படி செய்தாராம்! சிங்க பொம்மை அறுந்து தேரை இழுத்துவந்த ராஜகோபால் என் பவர் மீது விழ அவர் குய்யோமுறையோ என கூப் பாடுபோட்டு ஓட தேர் ஓட்டம் தடைபட்டது! ராஜகோபால் என்ற பக்தர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாராம்!

இங்க அமளியை கேள்வியுற்ற ஆண்டவர்கள் எங்களை நையாண்டி செய்வதுபோல கட்டிவைத்து திருவிழா என்ற பேரால் தொல்லைப்படுத்தும் கண் மூடி பழக்கங்கள் என்று மண்மூடிப் போகுமோ என்ப் பேசிக்கொண்டனராம்!

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம் 16. நியைபல்லவ ஜான் பீல் தெரு, சென்னை